2017 பெப்ரவரி 01
புதன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.அவ்வல் பிறை 03 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 019

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
நவமணி දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்



மஹிந்தவை தேர்தலில் நிறுத்தியதே நான் செய்த பெரும் பிழை

05»



04»

மாணவர் மைய கல்விச் சூழலும் தொழில் நுட்பமும்



12»

ட்ரம்பின் நடவடிக்கையால் 3ஆம் உலகப் போர் மூளும் அபாயம்

# சு.க. – ஐ.தே.க. கூட்டு தொடரும்

## பிளவுகளுக்கு இடமளியேன்

### அமைச்சரவையில் ஜனாதிபதி

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையே சில கருத்து முரண்பாடுகளை உருவாக்கி அரசினைப் பிளவுபடுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு நான் இடமளிக்கப்போவதில்லை என்றும் தொடர்ந்து இந்த அரசு அதன் பதவிக்காலம் வரை இருக்கும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அமைச்சரவைக் கூட்டத்தின் போது தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, ஐ.தே.க தவிசாளர் அமைச்சர் மலிக் சமரவிக்ரம மற்றும் செயலாளர் அமைச்சர் கபீர் ஹாசிம் என்னைச் சந்தித்து கலந்துரையாடியபடி ஐ.தே.க ஸ்ரீ லங்கா சுதந்திரக்

11 »»»»



## ஜனாதிபதிக்கு எதிராக கருத்து பிரபல சோதிடர் கைது



மக்களை தவறாக வழி நடத்தும் விதத்தில் கருத்து வெளியிட்டார் என்ற சந்தேகத்தின்பேரில் பிரபல ஜோதிடர் விஜித் ரோஹன விஜயமுனி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

இந்தியாவின் முன்னாள்

11 »»»»

### அமெரிக்காவில் தொடரும் அதிரடி

## ட்ரம்பின் உத்தரவை ஏற்க மறுத்த தலைமை நீதிபதி பதவி நீக்கம்



அமெரிக்காவில் அகதிகளை அனுமதிக்க மறுக்கும் ஜனாதிபதி டிரம்பின் உத்தரவை ஏற்க மறுத்த தலைமை வழக்கறிஞர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு புதிய வழக்கறிஞர் நியமிக்கப்பட்டுள்ளார்.

டிரம்பின் விசா மறுப்பு உத்தரவுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில் நாடு முழுவதும் பரவலாக போராட்டங்கள் நடைபெறுகின்றன. மேலும், டிரம்ப் உத்தரவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை விசாரித்த அமெரிக்க நீதிமன்றங்கள் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்துள்ளன.

இந்நிலையில் அந்நாட்டின் அட்டர்னி ஜெனரல் சாலி யேட்ஸ், நீதித்துறை வழக்கறிஞர்களுக்கு எழுதிய கடிதத்தில், டிரம்பின் முடிவை ஏற்க

11 »»»»

## சீ.வி. விக்னேஷ்வரனைப் போன்று ரணிலும் தமிழ் இனவாதியே

### ஞானசார தேரரின் புதுக் கண்டுபிடிப்பு

■ அ. அருண் பிரசாந்த்

வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனைப் போல பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் இனவாதி என்று பொது பல சேனா அமைப்பின் பொதுச்

11 »»»»



## டெங்கு ஒழிப்புக்கு புதுவகைத் திட்டம்

### அடுத்த வாரம் முதல் அமுல்

வேகமாக பரவிவரும் டெங்கு நோயை ஒழிப்பதற்காக முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக புதிய செயற்றிட்டமொன்று அடுத்த வாரம் அறிமுகப்படுத்தப்படுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

11 »»»»

## சைடம் நிறுவனத்துக்கு மருத்துவ பட்டம் வழங்க அனுமதி

■ பா.மலரம்பிகை

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியான சைடம் நிறுவனத்திற்கு மருத்துவ பட்டத்தை வழங்க சட்டபூர்வமாக அதிகாரம் உள்ளது என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றைய தினம் உத்தரவிட்டது.

சைடம் நிறுவனத்தில் பட்டம் பெற்ற தம்மை வைத்தியத்துறையில் பதிவு செய்ய

11 »»»»




## அரசியலமைப்பு அடிப்படை உரிமைகளில் எந்தவொரு பிரஜைக்கும் பாரபட்சம் கூடாது

### ஸ்ரீ லங்கா தௌஹீத் ஜமாஅத் தீர்மானம்

■ ஆதில் அலி சப்ரி

அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளில் இனம், மொழி, மதம், சாதி, பால், அரசியல் கொள்கை, பிறப்பியல் காரணமாக எந்தவொரு பிரஜைக்கும் பாரபட்சம் காட்டப்படலாகாது மற்றும் மத உரிமைகள் என்பவற்றை கேள்விக்குறியாக்கும் விதத்தில் அரசாங்கம்

11 »»»»

## நல்லாட்சி அரசாங்கத்துக்கு கோட்டா போபியா நோய்

■ அ. அருண் பிரசாந்த்

நல்லாட்சி அரசானது கோட்டா போபியா எனும் விசித்திரமான நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதாக பிவிதுரு ஹெல உறுமயக் கட்சித் தலைவரும்

11 »»»»



உதய கம்மன்பில



## நாமல் உள்ளிட்ட ஐவரின் கணக்குகளை பரிசீலிக்க நீதிமன்றம் உத்தரவு

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவை அவமதித்த

11 »»»»

## அக்குறணை அஸ்ஹர் கல்லூரி பிரதி அதிபர் பிணையில் விடுதலை

மாணவர்களைப் பாடசாலைக்குச் சேர்க்கும் வேளையில் தளபாடங்களுக்காகவென கட்டணம் அறவிடும் போது இலஞ்ச ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில்

11 »»»»

## இலங்கை இறையாண்மையில் அமெரிக்க தூதுவர் தலையீடு

### பொது எதிரணி குற்றச்சாட்டு



■ அ. அருண் பிரசாந்த்

இலங்கையின் இறையாண்மையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஸாப் தலையிடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று நேற்று வலியுறுத்திய மஹிந்த சார்பு பொது எதிரணியினர், யாழ்ப்பாணத்தில் வெளிவிவகார அமைச்சின் பிராந்திய அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டமை பாரதூரமான விடயமாகும் என்றும் குறிப்பிட்டனர்.

11 »»»»

## ட்ரம்பின் வெளிவிவகார கொள்கையால் இலங்கைக்கு பல்வேறு சாதகங்கள்

### அரசியல் ஆய்வாளர் ஜெஹான் பெரேரா



■ ஆதில் அலி சப்ரி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் வெளிவிவகாரக் கொள்கைகள் ஜெனீவா விடயத்தில் இலங்கைக்கு பல சாதகமான மாற்றங்களை எதிர்பார்க்கலாம் என்று சர்வதேச அரசியல் ஆய்வாளர் பேராசிரியர் ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியாக

11 »»»»



நவமணி



## கட்டுநாயக்க – அக்கரைப்பற்று புதிய பஸ் சேவைகள் ஆரம்பம்

**(மினுவாங்கொடை நிருபர்)**

கட்டுநாயக்க - விமான நிலையத்திலிருந்து அக்கரைப்பற்றுக்கு, இருவழி புதிய பஸ் சேவைகளை ஜனவரி மாதம் முதல் இ.போ.ச. திவுலப்பிட்டி மற்றும் அக்கரைப்பற்று டிப்போக்கள் இணைந்து ஆரம்பித்துள்ளன.

தினமும் காலை 6.30 மணிக்கு கட்டுநாயக்கவிலிருந்து புறப்படும் பஸ் வண்டி, மினுவாங்கொடை, நிட்டம்புவ, கேகாலை, மாவனல்லை, கண்டி, மஹியங்கனை, அம்பாறை, சம்மாந்துறை, காரைதீவு வழியாக அக்கரைப்பற்றைச் சென்றடையும். இதே நேரம், மற்றுமொரு பஸ் வண்டி, காலை 6.45 மணிக்கு அக்கரைப்பற்றிலிருந்து புறப்பட்டு, இதே வழியாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும்.

இதன் ஒரு வழிக் கட்டணமாக 590 ரூபா அறவிடப்படும் என்றும், முன் கூட்டியே ஆசனப் பதிவுகளை, கட்டுநாயக்க மற்றும் அக்கரைப்பற்று பஸ் நிலையங்களில் மேற்கொள்ள முடியும் என்றும் அக்கரைப்பற்று டிப்போ அத்தியட்சகர் எம். ஏ. இர்ஷாத் தெரிவித்தார்.

வைபவ ரீதியாக அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட புதிய இப் பஸ் சேவைகளின் மூலம், கட்டுநாயக்க வர்த்தக வலய தொழிலாளர்கள் மற்றும் விமான நிலையப் பயணிகள், அறுகம்பை உல்லாசப் பயணிகள், பல்கலைக் கழக மாணவர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் பலரும் நன்மையடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுபான்மையினரை நெருக்கினால் அரசுக்கு பாரிய நெருக்கடி

## - பிரதி அமைச்சர் அமீரலி



**(வாழைச்சேனை நிருபர்)**

சிறுபான்மையினரைப் பாதிக்கின்ற எந்த விடயத்திற்கும் நல்லாட்சி அரசு பாரிய விலை கொடுக்க வேண்டி வரும் என கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

ஓட்டமாவடி அல் இக்பால் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா மற்றும் நூலகக் கட்டடத் திறப்பு விழா நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு பிரதியமைச்சர் மேலும் உரையாற்றுகையில்,

எதிர்காலத்தில் அரசியல் மாற்றங்கள், அரசியலமைப்பு மாற்றங்கள் எனப் பேசப்பட்டு வருகின்றது. சிறுபான்மை இனத்தைப் பாதிக்கின்ற எந்த அரசியல் மாற்றமாக, திட்டமாக இருந்தாலும் தமது கட்சி மாத்திரமன்றி ஏனைய சிறுபான்மைக் கட்சிகளும் இந்த நாட்டில் எதிராக இருகின்றனர்.

இந்நாட்டில் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்டு போன தமிழ் பேசுகின்ற சமூகத்திற்கு ஒரு நியாயம் கிடைக்க வேண்டுமென்று எடுத்துக் கொள்கின்ற முயற்சியில் மீண்டும் சிறுபான்மைச் சமூகத்தின் குரல் வளைகளை நசுக்குகின்ற திட்டமாக அரசியலமைப்பு யாப்பு மாற்றம் இருக்குமாக இருத்தால், இப்பிரதேசத்திலிருக்கின்ற தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மாத்திரமல்லாமல் அனைத்து சிறுபான்மைக் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் சிறு கட்சிகளும் ஒற்றுமைப்பட்டு, அதற்கெதிராக போர்க்கொடி தூக்குவதற்கு தயாராக இருக்கின்றது.

சிறுபான்மைப் சமூகத்தைப் பாதிக்கின்ற எந்த விடயத்திற்கும் பாரிய விலை கொடுக்க வேண்டிய நிலைமை பெரும்பான்மைக் கட்சிகளின் இரு தலைவர்களுக்கும் ஏற்படும் என்றார்.

வித்தியாலய அதிபர் ஏ.மீரா முகைதீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மத்திய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.அஷ்ரப், ஓட்டமாவடி மேற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.ஜுனைட், கோறளைப்பற்று மத்தி இளைஞர் சேவை உத்தியோகத்தர் எம்.றம்ஸி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## டெங்கு ஒழிப்பும் சிரமதான நிகழ்வும்



**(ஓட்டமாவடி எச்.எம்.எம்.பர்ஸான்)**

ஓட்டமாவடி கல்விக் கோட்டத்தின் கீழுள்ள மட்/மம/வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் இன்று 26ம் திகதி பாடசாலையின் அதிபர் எம்.ரீ.எம். பரீத்தின் வழிகாட்டலில் பாடசாலை சுற்றுச் சூழல் முழுவதையும் துப்புரவு செய்யும் வேலைத் திட்டம் மிகச் சிறப்பாக நடை பெற்றது.

அண்மைக் காலமாக பெய்து வரும் மழை நீர் பாடசாலையின் சில இடங்களில் தேங்கி நிற்பதன் காரணமாக டெங்கு நோய் பரவும் நிலை காணப்படுவதால் இவ் வேலைத்திட்டம் மேற் கொள்ளப்பட்டது என்று அதிபர் எம்.ரீ.எம்.பரீட் தெரிவித்தார். இதில் பாடசாலையின் ஆசிரியர்கள்,மாணவிகள் கலந்து கொண்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

## அமைச்சர் ஹரீஸின் வழிகாட்டலில் சாய்ந்தமருதில் கல்வி வாரம் பிரகடனம்

**(நியாஸ் இஸ்மாயில்)**





விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம். எம்.ஹரீஸின் வழிகாட்டலில சாய்ந்தமருது கல்வி அபிவிருத்திச் செயலணிக் கூட்டம் சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் வை.எம்.ஹனீபா தலைமையில் பெரிய பள்ளியில் இடம்பெற்றது.

அண்மையில் சாய்ந்தமருது பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் ஹரீஸினால் எடுக்கப்பட்ட அவசர தீர்மானத்திற்கு அமைவாக இக்கூட்டம் கூட்டப்பட்டது.

இதில் சாய்ந்தமருது பிரதேச கல்வியை கட்டியெழுப்பும் முகமாக எதிர்வரும் பெப்ரவரி 13ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரையிலான ஒரு வார காலத்தினை சாய்ந்தமருது கோட்டத்திற்கான விசேட கல்வி வாரமாக பிரகடனம் செய்து அவ்வாரத்தில் பல்வேறுபட்ட கல்வி அபிவிருத்தி செயற்திட்டங்கள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளன.

இவ்வாரத்தினுள் மக்களை விழிப்பூட்டும் கல்வி நடைபவனி, ஆசிரியர்களுக்கான செயலமர்வு, கல்வி நம்பிக்கை நிதியம் உருவாக்குதல், பெற்றோர்களை விழிப்பூட்டல் நிகழ்வு, கல்வி முன்னேற்றம் பற்றி பள்ளிவாசல்களில் பயான் செய்தல், கல்வி வாரத்திற்கு ஊர் அரசியல் தலைமைகளை இணைத்துக் கொள்ளல், இறுதியாக கல்வி மாநாடு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இக்கூட்டத்தில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.ஜலீல், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரி ஏ. றகுமான், உலமா சபை தலைவர் யூ.எல். காசிம், சாய்ந்தமருது கோட்ட பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகள், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## பெல்மதுளையில் காணி உறுதிப்பத்திரம் கடன்கள் வழங்க ஏற்பாடு

**(ஏ.ஏ.எம்.பாயிஸ்)**



பெல்மதுளை தேர்தல் தொகுதியில் காணியுறுதி இல்லாதவர்களுக்கு அதனை வீடமைப்பு அதிகார சபையுடன் இணைந்து பெற்றுக்கொள்ளும் செயற்றிட்டத் தொடர் இடர் முகாமைத்துவ பிரதியமைச்சர் தினேஷ் கங்கந்த தலைமையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கிணங்க கிராம மட்டத்தில் அவ்வாறானவர்களை இனங்கண்டு காணியுறுதி இல்லாத பெல்மதுளை பிரதேச பயனாளிகளுடன் நடத்தப்பட்டு வரும் கலந்துரையாடல் தொடரில் பெல்மதுளை வெலிமலுவ புவக்கேல்ல ஆகிய பகுதிகளில் காணி வீட்டுறுதிகளில்லாத மொத்தம் 88 பயனாளிகளுக்கான உறுதிகளை சலுகைக் கட்டணத்தில் வழங்கவும் இவர்களுக்கான வங்கிக்கடன்களைப் பெற்றுக்கொள்ள உதவவும் பிரதியமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

## பல்கலைக்குத் தெரிவான மாணவர்களுக்கு கருத்தரங்கு

**( எம்.ஐ.எம்.அஸ்ஹர்)**

கல்முனை, சாய்ந்தமருது கல்வி ஆய்வு அபிவிருத்தி சபை (Counc il for Education, research and development ) ஒழுங்கு செய்துள்ள 2016/2017 கல்வியாண்டில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கான விண்ணப்பப்படிவங்களை ஒன்லைன் மூலமாக நிரப்புதல் , சரியான பொருத்தமான பாடநெறிகளை தெரிவு செய்தல் சம்பந்தமான ஆலோசனை வழங்குவதற்கான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கு கல்முனை, சாய்ந்தமருது கல்வி ஆய்வு அபிவிருத்தி சபை கல்முனை வலய கல்விப் பணிமனையின் கணினி வளநிலையத்துடன் அதாவது பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவினால் ஒன்லைன் மூலம் பதிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துடன் இணைந்து முற்றிலும் இலவசமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அபிவிருத்தி சபையின் தலைவர் எம்.ஐ.எம்.சதாத் தெரிவித்தார்.

பெற்றோர்கள் இக்கருத்தரங்கில் தமது பிள்ளைகளை பங்குபெறச் செய்து கடந்த காலங்களில் பல்கலைக்கழக பாடநெறிகளைத் தெரிவு செய்வதில் ஏற்பட்ட தடங்கல்களையும் தவறுகளையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## சிறுபான்மையினரின் தேவைகளை உணர்ந்து செயற்படும் கட்சி ஐக்கிய தேசியக்கட்சியே

### பா.உ ஆனந்த அலுத்கமகே

**(குருநாகல் இக்பால் அலி)**

வீழ்ச்சி கண்டு செல்லும் தோட்டத் தொழில் துறையை எமது நாட்டுப் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்று இலாப இலக்கை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

கைவிடப்பட்டுள்ள தோட்டத்தை மீளவும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்து, அதனை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக பிரதமருக்கு ஆலோசனை வழங்கி செயற்படவிருப்பதாக கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த அலுத்கமகே உறுதியளித்துள்ளார்.

கண்டி ஐக்கிய தேசியக் கட்சி காரியாலயத்தில் பாத்ததும்பர தேர்தல் தொகுதியிலுள்ள தமிழ் தோட்டச் சங்கங்களின் தலைவர்களுடனான சந்திப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மலையகத் தோட்டத் தொழிலாளர் மக்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுக் கொடுத்தது ஐக்கிய தேசியக் கட்சியாகும். மேலும் இ.தொ.க தலைவர் மறைந்த தொண்டமானின் வேண்டுகோளின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவினால் இது வழங்கப்பட்டது. அதனால் தான் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து வருகின்றவர்களாக உள்ளனர். கடந்த காலங்களில் மக்கள் நிம்மதியாகச் சென்று வாக்களிக்கும் சூழல் இவர்களுக்கு இருக்கவில்லை. இச்சிறுபான்மையின மக்களுடைய அனைத்து தேவைகளையும் உணர்ந்து செயற்படக் கூடிய அரசாங்கம் இருக்குமாயின் ஐக்கிய தேசிய கட்சியாகத் தான் இருக்கும் என்று கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த அலுத்கமகே அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.



பயாகலை வடக்கு பகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களை பாதுகாப்பாக வைக்கக்கூடிய வகையில் பல கோடி ரூபாய் செலவில் புதிய கட்டிடமொன்று அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நடும் வைபவம் சிறப்பாக நடைபெற்றது. கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் டுலிப் வெதஆராச்சி அடிக்கல் நடுவதையும் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல், முன்னாள் உறுப்பினர் எம் எம் அம்ஜாத் உட்பட பிரமுகர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். **(படம்: பேருவளை நிருபர்)**

## மினிப்பே இடது அணை உயர்த்துவது தொடர்பில் திருமலையில் செயலமர்வு

**(திருமலை சமீம் முஹம்மட்)**

மினிப்பே இடது கால்வாயை உயர்த்துவது தொடர்பில் திருகோணமலை அல்லை விசாய குடியேற்ற மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று குறித்த பிரதேச விவசாய சங்கங்கள் கருத்து தெரிவித்த நிலையில் குறித்த செயற்றிட்டம் தொடர்பில் பிரதேச அரசியல் தலைமைகள் மற்றும் அரச அதிகாரிகளை தெளிவுபடுத்தும் செயலமர்வு இன்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சு மற்றும் நீர்ப்பாசன நீர்வள முகாமைத்துவ அமைச்சை சேர்ந்த அதிகாரிகள் இத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தியதுடன் பொது மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களால் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் மற்றும் சந்தேகங்களுக்கு பதில்களும் அவ்வப்போது வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே,பாராளுமன்ற உறுப்பினர் கே.துரைரத்ணசிங்கம், கிழக்கு மாகாண அமைச்சர் ஆரியவதி கலப்பதி, திருகோணமலை மாவட்ட செயலாளர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

# நிகழ்வுகள்

## கிண்ணியாவில்...

**(கந்தளாய் எப்.முபாரக்)**

திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 69ஆவது சுதந்திரதின நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி கிண்ணியா எழிலரங்கு விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முப்படையினர் சிவில் பாதுகாப்புப் படையணிகள் கிண்ணியா பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை கிண்ணியா பிரதேச செயலகம் மேற்கொண்டு வருவதாக அதன் நிர்வாக உத்தியோகஸ்தர் நித்திய லட்சுமி ரத்தின வடிவேல் தெரிவித்தார்.

## களுத்துறை...

களுத்துறை மாவட்டத்திலுள்ள பில்லனிய பிரதேச செயலக கலாசார பிரிவு வருடாந்தம் நடத்தும் பில்லனிய பிரதேச தைப்பொங்கல் விழா நாளை வியாழக்கிழமை மு.ப 9.00 மணிக்கு திக்ஹேன ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் முற்றவெளியில் நடைபெறும் கோவிலில் விசேட பூஜை வழிபாடுகளுடன் பாடசாலைச் சிறார்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறும். பிரதேச செயலாளர் உட்பட பலரும் நிகழ்வில் பங்குபற்றுவர்.

## கண்டியில்...

**(குருநாகல் இக்பால் அலி)**

69 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கண்டி நகர் ஜம்மிய்யதுல் உலமா சபை மற்றும் பள்ளிவாசல்கள் சம்மேளனம் இணைந்து நடத்தும் விசேட நிகழ்வு 04 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கண்டி மீரா மக்காம் பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் நிலூகா ஏக்கநாயக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இதில் உலமாக்கள், பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் நிருவாகிகள், அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## பேருவளையில்...

**(பேருவளை நிருபர்)**

இலங்கையில் 69 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு பேருவளை சீனன் கோட்டை அல் ஜாமியத்துல் பாஸியத்துஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி சுதந்திரதின நிகழ்வு மு.ப. 8.00 மணிக்கு அதிபர் மௌலவி எம்.ஏ.எம். அஸ்மிகான் (முஅய்யிதி) தலைமையில் கலாபீடத்தில் நடைபெறும்.

கலாபீட மாணவர்கள் விரிவுரையாளர்கள் நிர்வாகசபை உறுப்பினர்கள், உலமாக்கள், நிகழ்வில் பங்குபற்றுவர். நாட்டின் அமைதி சமாதானம் சுபீட்சத்திற்காக துஆப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

## பாணந்துறையில்...

**(எம்.எஸ்.எம். முன்தஸிர்)**

பாணந்துறை தொட்டவத்தை அல்பஹ்ரியா மத்திய கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் நாளை வியாழக்கிமை கல்லூரியின் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுப்போட்டியின் பரிசளிப்பு விழா களுத்துறை வலயக்கல்வி பணிப்பாளர் ஓ.எம்.வீஜ.பீ. முதலிகே தலைமையில் இடம்பெறவுள்ளது. மேல் மாகாண கல்வியமைச்சர் ரஞ்சித் சோமவன்ச பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். மேல் மாகாண தமிழ் மொழிப்பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், மேல்மாகாண தமிழ் மொழிப்பிரிவின் உதவிக்கல்விப்பணிப்பாளர் உதய குமார், களுத்துறை வலய உதவிக்கல்வியாளர்களான எம்.டி.எம் இல்யாஸ், கே. மீகமுவகே உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

# ஜனாதிபதி தலைமையில் போதை ஒழிப்புப் பேரணி

## 3,000 இளைஞர்கள்,10,000 சமூகசேவையாளர்கள் பங்கேற்பு




(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஏறாவூரில் இன்று புதன்கிழமை (01) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஆரம்பித்து வைக்கப்படும் போதை ஒழிப்புப் பேரணியில் 3 ஆயிரம் இளைஞர்கள் உட்பட சமூகசேவைச் செயற்பாட்டாளர்கள் என மொத்தமாக 10 ஆயிரம் பேர் பங்கேற்பர் என்று கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக முதலமைச்சர் செயலகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

போதையிலிருந்து விடுதலை பெற்ற நாடு என்ற ஜனாதிபதியின் தூரநோக்கு இலக்கின் அடிப்படையிலும் கிழக்கு மாகாண சபையின் செயற்றிட்டத்தின் அடிப்படையிலும் போதையற்ற கிழக்கு எனும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் செயற்படும் இளைஞர் அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றிலிருந்து போதையொழிப்பில் ஆர்வமுள்ள 3 ஆயிரம் இளைஞர்கள் பங்குபற்றுகின்றார்கள். மேலும் போதையொழிப்பில் ஆர்வமுள்ள செயற்பாட்டாளர்களுமாக மொத்தம் 10 ஆயிரம் பேர் போதையற்ற கிழக்கு வேலைத்திட்டத்தில் இணைந்து கொள்கின்றார்கள்.

# பெற்றோர்களுக்கு கல்வி அமைச்சால் அறிவித்தல்

பாடசாலைகளில் மாணவர்களை இணைத்துக்கொள்ளும் போது பற்றுச்சீட்டு வழங்காமல் பணம் அறவிடப்படுமாயின், உடனடியாக அது தொடர்பில் அறிவிக்குமாறு கல்வி அமைச்சு பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் அறிக்கையொன்றை வெளியிட்டு இதனை தெரிவித்தார்.

இவ்வாறு பணம் அறவிடப்படுமாயின் அருகில் அமைந்திருக்கும் வலயக் கல்வி அலுவலகத்தில் அல்லது உள்ளூர் அலுவலகத்தில் அறிவிக்குமாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக பணம் அறவிடப்படுவதாக கல்வி அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளை தொடர்ந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# புதிய நுளம்பு வகை மன்னாரில் கண்டுபிடிப்பு

மலேரியாவை முற்றாக ஒழித்த நாடாக இலங்கையை உலக சுகாதார நிறுவனம் பிரகடணப்படுத்தியுள்ள நிலையில், அழிப்பதற்கு கடினமான, மலேரியா நோயைப் பரப்பும் புதிய நுளம்பு வகை ஒன்று மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார், பேசாலைப் பகுதியில் இருந்த கிணறுகளில் இருந்து இந்த நுளம்பு வகை கண்டறியப்பட்டுள்ளது. இலங்கைக்கும் பரவியிருக்க வாய்ப்புகள் உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

# முஸ்லிம் ஜனாஸா சங்கத்தின் சுதந்திர தின நிகழ்வு

இலங்கை முஸ்லிம் ஜனாஸா சேவை சங்கத்தின் சட்ட உதவி மற்றும் பொது தொடர்பு உப குழு, கோர்னஸ் கோர்ட் பாராமரிப்பு குழுவுடன் இணைந்து நடாத்தும் சுதந்திர தின நிகழ்வுகள் எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

சிட்டி கோர்னர் கோர்ட், தேசிய வைத்தியசாலை கொழும்பு 10 இல் எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 10 மணிக்கு குறித்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

# நாக்கின் கீழ் தங்க பிஸ்கட் கடத்த முயன்றோர் கைது



நாக்குக்குக் கீழே மறைத்து வைத்து தங்க பிஸ்கட்களைக் கடத்த முயற்சித்த இருவர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று காலை, கைதுசெய்யப்பட்டனர்.

சுமார் 1 மில்லியன் ரூபா பெறுமதியுடைய 180 கிராம் நிறைகொண்ட தங்க பிஸ்கட்களை, இந்தியாவின் திருவனந்தபுரம் பகுதிக்கு, இவர்கள் கடத்த முயற்சித்துள்ளதாக, ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குறித்த இருவரில் ஒருவர், பேசுவதற்கு மிகுந்த சிரமப்பட்டதனால், அர்களின் நடத்தையில் எழுந்த சந்தேகத்தைத் தொடர்ந்து, இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டதாக, கட்டுநாயக்க விமான நிலையப் பிரதி சுங்கப் பிரிவு தெரிவித்தது.

# யாழில் மீண்டும் ஆவா குழு ஐவர் அடையாளம்



(அ.அருண் பிரசாந்த்)

யாழ்ப்பாணம், அரசடி வீதியிலுள்ள கடையொன்றில் நேற்று முன்தினம் இரவு இரு இளைஞர்கள் மீது வாள் வெட்டு நடத்தி, குறித்த கடைக்கு தீ வைத்த ஆவா குழு இளைஞர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஐவரை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு, 7.20 மணியளவில் 4 மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடி அணிந்த இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பில் யாழ். பொலிஸார் குறித்த கடையினுள் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமெரா பதிவுகளை அடிப்படையாக கொண்டு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்தோடு, இத்தாக்குதலினால் காயமடைந்த 24 வயதான கஜலக்சன், 20 வயதான அஜித் ஆகியோர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு வீரர்களால் தீ கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டமையால் பெருமளவிலான சேதங்கள் இடம்பெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படித் தாக்குதல் மேற்கொண்ட இளைஞர்கள் முகத்தை மறைக்கும் வகையில் தலைக்கவசம் மற்றும் துணியால் முகத்தை மறைத்திருந்தாலும், தற்போது பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிரடி நடவடிக்கையினை அடுத்து அடையாளம் காணப்பட்டுள்ள ஐவரும் வெகுவிரைவிலேயே கைது செய்யப்படுவார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை சுதந்திர தினம் ஜப்பானில் கொண்டாட்டம்

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 4 ஆம் திகதி ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெறவுள்ள 69 ஆவது சுதந்திரதின நிகழ்வுகளில் நந்தா மாலினியுடன் சுதந்திர மாலைப்பொழுது என்ற விசேட இசைநிகழ்ச்சியை ஜப்பானுக்கான இலங்கை தூதுவராலயம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் விஷாரத நந்தா மாலினியுடன் கலந்துரையாடலொன்றும் இடம்பெறவுள்ளது நிகழ்வின் இசை ஏற்பாடுகளை பிரபல இசையமைப்பாளர் நவரத்ன கமகே தலைமையில் இடம்பெறும்.

69 ஆவது சுதந்திர தின நிகழ்வு டோக்கியோ நகரில் மினாத்தோ T C ரையுகாய் விஹாரையின் கலைக்கூடத்தில் மாலை 3 மணிமுதல் நடைபெறும்.

# மாகாண சபைத் தேர்தல்கள்; ஒத்திவைக்க அரசு திட்டம்

## ரோஹித அபேகுணவர்தன எம்.பி

(எம்.ஏ.முஹம்மட் உவைஸ்)



உள்ளூராட்சி சபைத் தேர்தல் இரண்டு வருடங்களாக ஒத்திப் போடப்பட்டுள்ளதுபோல் சப்ரகமுவ, வட மத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலையும் ஒத்திப் போடுவதற்கு அரசு திட்டமிடுவதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி எம்.பி. ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான நுகேகொடை கூட்டத்தின் பின் அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பில் கருத்துக் கூறும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்;

இந்த வருடமே ஆட்சியை கவிழ்க்கும் எமது போராட்டம் நுகேகொடையில் இருந்து தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. நுகேகொடை கூட்டம் வெற்றியளித்துள்ளது. இதனைத் தொடர்ந்து நாடுபூராகவும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

எமது ஆட்சியில் நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகம் தேவையற்ற ஒன்று என்று கூறிவிட்டு அதை இப்போது சீனாவுக்கு விற்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. எமது அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் சரியானவைதான் என்பற்கு இது ஒன்றே போதும்.

அம்பாந்தோட்டை துறைமுகம் மாத்திர மன்றி நாட்டின் வளங்கள் அனைத்தையும் விற்பனை செய்வதற்கு இந்த அரசு தீர்மானித்துள்ளது. இந்த வருடம் முடிவதற்குள் அதிகமான சொத்துக்கள் விற்கப்பட்டுவிடும். சீனா உள்ளிட்ட அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கும் சொத்துக்கள் விற்கப்படவுள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்கவில்லை கூட்டு முயற்சியின் ஊடாக அபிவிருத்தி செய்யப் போகின்றோம் என்று இந்த அரசு கூறுகின்றது.அப்படியென்றால் ஏன் இதைத் திருட்டுத்தனமாக செய்ய வேண்டும்? மக்களிடமோ மக்களின் பிரதிநிதிகளான எங்களிடமோ இதுபற்றி அறிவிக்காமல் செய்வது ஏன்?

உள்ளராட்சி சபைத் தேர்தல் இரண்டு வருடங்களாக ஒத்திப் போடப்பட்டுள்ளதுபோல் சப்ரகமுவ, வட மத்திய,வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலையும் ஒத்திப்போடுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. தோல்விப் பயமே இதற்கு காரணம்.

இந்த மோசமான நிலைமை மேலும் தொடர அனுமதிக்க முடியாது. இதற்கு இன்றே முடிவு கட்ட வேண்டும் என்றார்.

# தெற்காசிய சபாநாயகர் மாநாட்டில் பாகிஸ்தான், மியன்மார் பங்கேற்காது

(திருச்சி சாஹுல் ஹமீது)

தெற்காசிய சபாநாயகர்கள் மாநாட்டில் பங்கேற்க இயலவில்லை என பாகிஸ்தானும், மியான்மாரும் இந்தியாவின் அழைப்பிற்கு மறுப்பு தெரிவித்து கடிதம் எழுதியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய அரசு மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் பெப்ரவரி 18, 19 ஆம் திகதிகளில் தெற்காசிய சபாநாயகர்கள் மாநாட்டை நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்ட பணிகள் ஆரம்பம்

நல்லாட்சி அரசின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான கண்டி-குருநாகல் அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் பணியின் அங்குரார்ப்பண நிகழ்வை பிரதமர் ரணில் விக்ரமசிங்க இன்று அடிக்கல் இட்டு ஆரம்பித்துவைக்கவுள்ளார். அலவ்வ- கிரிஉல்ல பிரதான வீதியின் குடாகம்மான என்ற இடத்தில் இன்று காலை 10மணிக்கு இடம்பெறவுள்ள நிகழ்வில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல உள்ளிட்ட அரசியல் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானிய கண்காட்சி கொழும்பில்




ஜப்பானின் பாரம்பரிய கலை, கலாசாரம் மற்றும் வர்த்தகம் என்பவற்றை வெளிப்படுத்தும் வகையிலான கண்காட்சி கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதன்போது தொழில்நுட்பம் சார்ந்த பல விடயங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, இந்த கண்காட்சி நிகழ்வானது இலங்கை மக்களுக்கு ஜப்பான் தொடர்பான தகவல்களை நேரடியாக அறிந்து கொள்வதற்கு சிறந்த வாய்ப்பாக அமையும் என அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கெணச்சி சுகனுமா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாக்கீர் மாக்காரின் 100வது பிறந்த தினத்தை முன்னிட்டு கட்டுரை, சித்திரப் போட்டிகள்

மறைந்த எம்.ஏ.பாக்கிர் மாக்காரின் 100 ஆவது பிறந்த தினமான எதிர்வரும் மே 19 ஆம் திகதியை நினைவு கூர்ந்து நாடு தழுவிய ரீதியில் கட்டுரை மற்றும் சித்திரப் போட்டியொன்றினை தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான செயலகத்துடன் இணைந்து நடத்துவதற்கு தேசிய ஒற்றுமைக்கான பாக்கிர் மாக்கார் மத்திய நிலையம் ஏற்பாடு செய்துள்ளது. வேற்றுமையில் ஒற்றுமையே தேசத்தின் பலம் என்ற தொனிப்பொருளின் கீழ் கட்டுரை, சித்திரப் போட்டிகள் இடம்பெறவுள்ளது. கட்டுரைப் போட்டிக்காக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சமர்ப்பிக்க முடியும். ஆக்கங்கள் அதிபர் ஊடாகவே அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் கலந்து கொள்வார்கள். கல்வி அமைச்சின் அனுமதியுடன் நடைபெறும் இந்த கட்டுரை மற்றும் சித்திரப் போட்டி தொடர்பான விபரங்கள், போட்டியில் கலந்து கொள்வதற்கான விபரங்கள் எதிர்வரும் நாட்களில் ஊடகங்கள் வெளியிடும்.

# பிரித்தானிய இலங்கை தூதுவருடன் யாழ்.முஸ்லிம்கள் சந்திப்பு



பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் அமரி விஜயவர்த்தனவுடன் யாழ்ப்பாண முஸ்லிம்கள் நேற்று (30) சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், மீள்குடியேறியுள்ள முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சவால்கள், யாழ்ப்பாணம் தவிர்ந்து ஏனைய பகுதிகளில் அகதிகளாக வாழும் யாழ்ப்பாண முஸ்லிம்களின் நிலவரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றி விளக்கப்பட்டது.

இச்சந்திப்பில் சர்வதேச யாழ்ப்பாண முஸ்லிம் அமைப்பு சார்பில் அஸாஹிம், மொஹமட், ரமீஸ், அஸ்கர், அஸ்வர், தஸ்லிம் ஆகியோர் பங்கேற்றனர்.

இவ்வளவு காலமும் யாழ்ப்பாண முஸ்லிம்களின் விவகாரங்கள் தமது கவனத்திற்கு கொண்டு வரப்படாமை குறித்து தமது கவலையை வெளிப்படுத்திய பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் அமரி விஜயவர்த்தனா எதிர்காலத்தில் யாழ்.முஸ்லிம்களுடன் தொடர் பேச்சுக்களில் ஈடுபடவும் இணக்கத்தை வெளிப்படுத்தினார். இதன்போது யாழ்ப்பாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது. இதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிப்பதாக உறுதிவழங்கினார்.

# தரமான தலைக் கவசம் ஏப்ரல் முதல் கட்டாயம்

மோட்டார் வண்டிகளை செலுத்துபவர்கள் தொடர்பில் தரமான மற்றும் பாதுகாப்பான தலைக்கவசங்களை கட்டாயமாக அணிதல் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து செயற்படுத்தப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். இது தொடர்பில் உடனடியாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வீதி பாதுகாப்பு தொடர்பில் தேசிய சட்டசபையில் முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தல் மற்றும் எதிர்வரும் காலத்தில் பாதிக்கப்பட்டவர்களின் தொகையை குறைப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

வாகன விபத்துக்களில் காயமடைந்த மற்றும் உயிரிழந்த நபர்களை சார்ந்துள்ளவர்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்படவுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சு மேலும் சுட்டிக்காட்டினார்.

# புத்தளத்திற்கு புதிய பொலிஸ் அத்தியட்சகர்

புத்தளத்திற்கு புதிய பொலிஸ் அத்தியட்சகராக குண்டசாலை பொலிஸ் கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் ஜே.ஏ.சந்திரசேன பதவியேற்றுள்ளார்.

புத்தளம் மாவட்டத்தில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவைக் கட்டி எழுப்புவதற்கு முன்னுரிமையளிப்பதாக புதிய பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
01ST FEBRUARY 2017 - WEDNESDAY

# கனேடிய பிரதமர் ஜஸ்டின் டுரூடோ அரசியல்வாதிகளுக்கோர் முன்னுதாரண புருஷர்

கனடாவின் கியூபெக் பிரதேசத்திலுள்ள இஸ்லாமிய கலாசர நிலைய மஸ்ஜிதில், பயங்கரவாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 6 முஸ்லிம்கள் உயிரிழந்துள்ள செய்தி, கனேடியர்களை கவலைகொள்ளச் செய்துள்ளது. கடந்த ஞாயிறு (29) இரவு 08 மணி அளவில், இத்துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்படும்போது, 50 பேர் அளவில் இந்நிலையத்தில் இருந்துள்ளனர்.

பல்லின பல்கலாசார சகவாழ்வுக்கும், நல்லிணக்கத்துக்கும் பெயர் பெற்ற கனடாவில், இவ்வாறான ஒரு பயங்கரவாத சம்பவம் நிகழ்ந்தமை, அனைவரையும் ஆச்சரியத்துக்குட்படுத்தியுள்ளது. இந்தப் பயங்கரவாத சம்பவத்தைத் தொடர்ந்து, அறிக்கை விடுத்துள்ள கனேடிய பிரதமர் ஜஸ்டின் டுரூடோ, இந்த சம்பவத்தை, முஸ்லிம்களுக்கு எதிரான பயங்கரவாதம் என்று தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார்.

இவர் விடுத்துள்ள அறிக்கையில், முஸ்லிம்களுக்கு எதிரான இந்தப் பயங்கரவாதத் தாக்குதலை கண்டிப்பதாகவும், தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, அனைத்து கனேடியர்கள் சார்பாகவும், அவரது மனைவி சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனல்ட் டிரம்ப், முஸ்லிம்களுக்கும், குடியேற்றக்காரர்களுக்கும் எதிரான நிலைப்பாடுகளை தெளிவாகவும், பகிரங்கமாகவும் எடுத்து, அமெரிக்கர்களதும், உலக மக்களதும் எதிர்ப்பை சம்பாதித்துக்கொண்டிருக்கின்ற வேளையில், கனேடிய பிதமர் ஜஸ்டின், முஸ்லிம்களுக்கும், குடியேற்றக்காரர்களுக்கும் ஆதரவான நிலைப்பாடுகளை எடுத்திருப்பவர்.

அமெரிக்காவில் டொனல்ட் டிரம்பின் இனவெறி கொள்கைகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் மாறாக, கனடாவில் அனைத்து இன, மதத்தவர்களுக்கும் தாராளமான சுதந்திரத்தை வழங்கி, கனடாவை பன்மைத்துவத்தின் அடையாளமாக மாற்றி வருகிறவர் கனேடிய பிரதமர் ஜஸ்டின் டுரூடோ. கனடாவின் குடியேற்ற மற்றும் பிரஜா உரிமை அமைச்சராக சோமலிய பூர்வீகத்தைக் கொண்ட அஹ்மத் ஹுஸைன் என்ற முஸ்லிம் நபரை நியமித்திருக்கிறார் அவர்.

இவ்வாறான நிலையில், கனடாவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை ஆரம்பித்து, தூண்டிவிடும் நோக்கத்திலேயே, இத்தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கின்றமை தெளிவானதாகும். மேற்குலகில் முஸ்லிம்களுக்கு மிகவும் சௌகரியமான நாடாக கனடா மாறுவதை விரும்பாதவர்களே இவ்வாறான தாக்குதல்களின் பின்னால் உள்ளனர்.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து, ஜஸ்டின் டுரூடோ தெரிவித்துள்ள கருத்துக்களில் ஒரு முக்கியமான விடயம் உள்ளது. அதாவது, எப்போதும் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும்போது, அதனை ஒரு தனி நபருடன் தொடர்பான சம்பவமாகவோ, அல்லது மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொண்ட சம்பவமாகவேதான் மேற்குலக அரச தலைவர்களும், ஊடகங்களும் காட்டுகின்றன. ஆனால், இச்சம்பவத்தை முஸ்லிம்களுக்கு எதிரான பயங்கரவாதம் என்று ஜஸ்டின் டுரூடோ தெளிவாகவே தெரிவித்துள்ளார். இவ்வாறு துணிகரமாக கருத்து வெளியிட்டுள்ள அவர் பாராட்டுக்குரியவர்.

முஸ்லிம் கனேடியர்கள் எமது தேசிய கட்டமைப்பின் ஒரு முக்கிய பகுதி. எமது சமூகங்களிலும், நகரங்களிலும், இந்த நாட்டிலும், இவ்வாறான உணர்வற்ற நடவடிக்கைகளுக்கு எந்தவொரு இடமும் இல்லை. அனைத்து கனேடியர்களதும் உரிமைகளையும் கனேடிய சட்ட அமுலாக்க நிறுவனங்கள் பாதுகாக்கும் என்றும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மிகவும் ஆகர்ஷணமிக்க ஆளுமையைக் கொண்டுள்ள ஜஸ்டின் டுரூடோ, கனடாவை பன்மைத்துவத்தின் பூஞ்சோலையாக மாற்ற நினைப்பவர். கனடாவில் உள்ள அனைத்து இன, மத, கலாசாரங்களைச் சேர்ந்தவர்களையும் சமமாகப் பார்ப்பவர். அவர், அவரது இலக்கை அடையும் பயணத்தில் எதிர்கொள்ளும் தடைகளைத் தாண்டி, வீரியத்துடன் பயணிக்க வேண்டும் என்பதே அனைவரதும் பிரார்த்தனை.

கனேடிய பிரதமர் ஏனைய நாடுகளுக்கு, குறிப்பாக ஆட்சியாளர்களுக்கு ஒரு முன்னுதாரண புருஷராக உள்ளார். கடந்த காலங்களில் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் பரவலாக மேற்கொள்ளப்பட்ட போதும் அரச தலைவர்கள் வாய்திறக்கவில்லை. நம் அரச தலைவர்கள் கனேடிய பிரதமரிடமிருந்து படிப்பினையைப் பெறுவார்களா?

---

# மாணவர் மைய கல்விச் சூழலும் கல்வித் தொழில்நுட்பமும்

**எம்.எம்.எம். ரம்ஸீன்**
**கெலிஓயா**

கல்வி சமூக முதலீடு என்ற அடிப்படையில் மட்டுமன்றி சமூக மாற்றம் கல்வியால் சாத்தியமாகின்றது என்ற அடிப்படையிலும், தற்காலத்தில் கல்வி முக்கியத்துவம் பெறுகின்றது. ஆசிரியர்களின் வினைத்திறனான கற்பித்தல் மூலம் வளமான சமூகத்தைக் கட்டியெழுப்பவும், மாற்றத்தை ஏற்படுத்தவும் முடியும் என்பது யதார்த்தமாகும்.

கல்வியின் மூலம் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமை, விழுமியங்கள் மற்றும் பழக்கவழக்கங்களில் மாற்றம், விருத்தி ஏற்படுகின்றன. இதற்கு துணை புரிபவர் ஆசிரியர் ஆவார். எனவே கற்றல் - கற்பித்தல் தொழிற்பாட்டில் தவிர்க்க முடியாத பாத்திரங்கள் ஆசிரியர்களும் மாணவர்களுமாவர்.

ஆசிரியர் வகுப்பறையில் எதிர்கால சமூகத்தை காண்கின்றார் என்ற அடிப்படையில், சமூக ரீதியில் ஆசிரியர்கள் முக்கியத்தும் பெறுகின்றனர். ஆசிரியர் மையக் கல்வி எண்ணக்கரு

பின்பற்றப்பட்ட காலப்பகுதியில் கல்விப் புலத்தில் ஆசிரியர்களின் வகிபாகம் பாரியதாகும். ஆனால் மாணவர் மையக்கல்வியில் ஆசிரியர் உதவியாளராகவும், வசதியளிப்பாளராகவும், வழிகாட்டுபவராகவும் திகழ்கின்றார்.

நவீன தொழில்நுட்பத்தின் தாக்கம் சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில் கல்வித் துறையிலும் அதன் செல்வாக்கு அபரிமிதமானதாகும். இதனால் தான் அரசாங்கம் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மடிக்கணனிகளை பெற்றுக் கொடுப்பதற்கான ஆலோசனையொன்றை முன்வைத்துள்ளது.

கற்பித்தல் செயன்முறையில் தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்தும் போது, மகிழ்ச்சிகரமான கற்றல் நிகழ்வதுடன் ஆசிரியரின் கற்பித்தல் திறனும் மாணவனின் கற்றல் திறனும் விருத்தியடைகின்றன.

சமகாலத்தில் மாணவர் மையக் கல்வி கற்றல் - கற்பித்தலில் வலியுறுத்தப்படுவதுடன் பின்பற்றப் பட்டும் வருகின்றது. மாணவர் மையக் கல்வியில் ஆசிரியர் சகல துறைகளிலும் உதவி செய்து கற்றலை சாத்தியப்படுத்தும் வகிபாகத்தை வகிக்கின்றார். எனவே மாணவனுக்கு வழிகாட்டியாக ஆசிரியர்கள் திகழ்கின்றனர். மாணவர் மையக் கல்வி, ஆசிரியரின் தொழிற்பாடுகள், மாணவர்களின் தொழிற்பாடுகள், கற்றலுக்கான சூழல், கற்றல் வளங்களின் ஒழுங்கமைப்பு என்பவற்றினால் வினைத்திறனடைகின்றது.

எனவே இக்காரணிகள் மாணவர் மையக் கல்வியில் கற்றலின் அடைவுகளைத் தீர்மானிக்கின்றன. மாணவர் மையக் கல்வியில் மாணவன் தொழிற்படும் அளவுகளுக்கு ஏற்ப கற்றலின் அளவு நிகழும். ஆசிரியர்கள் வகுப்பறையில் மாணவர்களின் தொழிற்பாட்டை அதிகரிப்பதில் ஆர்வம் செலுத்த வேண்டும்.

வகுப்பறையில் ஆசிரியர், மாணவர் தொழிற்பாடுகள் சிறப்பாக இடம்பெற கல்வித் தொழில்நுட்பங்கள் முக்கியமானதாகும். ஆரம்ப பிரிவுகளில் முதன்மை நிலை ஒன்று, முதன்மை நிலை இரண்டு என்பவற்றில் வகுப்பறைகள் மூடிய வகுப்பறைகளாகக் காணப்படுகின்றன. இவ் வகுப்பறையில் மாணவர்கள் விளையாட்டின் ஊடாக கற்கும் நிலை முதன்மை நிலை ஒன்றில் அதிகமாகும். இங்கு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அதிகளவு மாணவர் தேர்ச்சி அடைவுகளை சாத்தியப்படுத்தலாம். இவ்வகுப்பறைகளில் தொலைக்காட்சி, ஓடியோ, இறுவட்டு முதலானவற்றை பயன்படுத்தலாம்.

ஆசிரியர்கள் வினைத்திறனான கற்பித்தலுக்கு தம்மை இயைபுபடுத்திக்கொள்ளல் மிகவும் அவசியம். அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும், இவற்றைப் பயன்படுத்துவதற்கும் தொழில்நுட்ப சாதனங்கள் துணை புரிகின்றன. இத்தொழில்நுட்ப சாதனங்களுள் கணனி, இணையம், பல்லூடகம், இறுவட்டு முதலானவை அடங்குகின்றன.

ஆசிரிய சமூகம் மாணவர்கள் மத்தியில் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிப்பதற்கு தொழில்நுட்ப சாதனப் பயன்பாடு உதவுகின்றது. அத்துடன் ஆசிரியர்களின் நேர முகாமைத்துவம் மற்றும் நிர்வாக செயற்பாடுகளை இலகுபடுத்தவும் முடியும்.

மாணவர் மையக் கல்வியில் மாணவர்களின் தேடல் இன்றியமையாததாகும். இத்தேடலை தொழில்நுட்ப சாதனங்கள் இலகுபடுத்துகின்றன. தரமான கல்வியால் தரமான சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். தொழில்நுட்ப சாதனங்கள் மாணவர்களின் திறமைகளுக்கேற்ப கற்றலில் பயன்படும். இக்கல்வித் தொழில்நுட்பங்கள் மூலம் ஆசிரியர்களால் வகுப்பறையில் வெளியுலகை கொண்டு வர முடியும். மேலும், மாணவனுக்கு புறக்காட்சியை வகுப்பறைக்குள் முன்வைக்கலாம். இதன் அடிப்படையில் ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்கள் கல்வித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த தூண்ட முடியும்.



மாணவனின் கற்றல் அனுபவங்களை விருத்தி செய்ய ஆசிரியர் மாணவனின் ஐந்து புலன்கள் மூலம் புலக்காட்சியை பெறுவதற்கு வழி செய்தல் அவசியம். எனவே இந்த ஐம்புலன்கள் மூலம் மாணவன் புலன்களைப் பயன்படுத்த பொருத்தமான தொழில்நுட்ப சாதனத்தை ஆசிரியர் வகுப்பறையில் முன்வைக்கலாம்.

வினைத்திறன்மிக்க ஆசிரியரால் மட்டும் வினைத்திறன்மிக்க மாணவனை உருவாக்கலாம். கல்வித் தொழில்நுட்பம் மூலம் மாணவர்களின் அடைவு மட்டம் அதிகரிக்கின்றது. மாணவர்களின் புத்தாக்க சிந்தனையை தூண்டவும் சுய கற்றலை விருத்தி செய்யவும் உதவும். இத்தொழில்நுட்பப் பயன்பாடு கற்றலில் கவர்ச்சியை ஏற்படுத்தி மாணவர்கள் மத்தியில் கற்றலில் ஈர்ப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய மாணவர்கள் இலத்திரனியல் தொழிநுட்பத்தின்பால் ஈர்க்கப்பட்டிருக்கும் நிலையில், தகவல் தொழில்நுட்பத்தை உள்வாங்கிக் கொள்வது அதிக பயனளிக்கும். இதற்கு ஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்வது அவசியம்.

வகுப்பறை கற்பித்தலில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களில் ஒன்று மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள், மாணவர்களின் பின்னணிகள், மாணவர் தேவைகளின் பல்வகைத் தன்மை என்பவற்றுக்கு மத்தியில் கற்பித்தலை இலகுவாக்க கல்வித் தொழில்நுட்பம் இன்றியமையாததாகும்.

எனவே மாணவனின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு வினைத்திறனான கற்பித்தல் அவசியம். வினைத்திறனான கற்பித்தலுக்கு கல்வித் தொழிநுட்ப சாதனங்கள் அவசியம். அறிவின் எல்லை விசாலப்பட்டு வரும் நிலையில் அவ்விசாலமான எல்லைக்குள் ஆசிரியர் மாணவனை அழைத்துச் செல்வதை தொழில்நுட்ப சாதனப் பயன்பாட்டின் மூலம் சாத்தியப்பத்தலாம்.

ஆசிரியர்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் தோற்றுப்போவதற்கு கற்பித்தலில் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தாமையும் காரணமாக அமைகின்றது. ஏனெனில் தற்கால மாணவ சமூகம் நவீன இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாடு மற்றும் இச்சாதனங்களைத் தழுவிய சூழல் என்பவற்றால் தொழில்நுட்ப சாதனங்கள் தொடர்பான அறிவில் அநுபவ ரீதியாக தேர்ச்சியை உள்வாங்கியதாகக் காணப்படுகின்றது. எனவே கல்வித் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் போது மாணவர்களின் அடைவு மட்டம் அதிகரிக்கின்றது. ஆசிரியரின் கற்றல் - கற்பித்தல் கருவிகளின் தெரிவில் சாதனங்கள் உள்ளடக்கப் பட வேண்டும்.

ஆனால், இதற்கான தடைகளாக ஆசிரியர்கள் பாட ஆயத்தமின்மை, நவீன சாதனங்களை பயன்படுத்தத் தெரியாமை, பழைமையான மனப்பாங்கு, அதிபர்களின் ஒத்துழைப்பின்மை, வளப்பற்றாக்குறை, ஆங்கில அறிவு போதாமை என்பன காணப்படுகின்றன.

---

NAVAMANI WEEKLY
நவமணி

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# மஹிந்தவை தேர்தலில் நிறுத்தியதே நான் செய்த பெரும் பிழை



**முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசின் ஈராண்டு நிறைவு தொடர்பாக ஞாயிறு லங்காதீப பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் இறுதிப் பகுதி.**

**உபுல் விக்ரமசிங்க**
**தமிழில்: அஷ்கர் தஸ்லீம்**

(நேற்றைய தொடர்ச்சி)

**கேள்வி:** இவ்வாறான பிரச்சினைகள் குறித்து உங்களுடன் பேசுவாரா?

**பதில்:** முதல் சில மாதங்களில் மிகவும் நெருக்கமாகப் பேசினார். அவர் சுயாதீனமாக செயற்பட வேண்டும் அல்லவா. எனவே, நான் தலையிடச் செல்லவில்லை. ஆனாலும், பெரிய பிரச்சினைகள் வரும்போது, அவர் என்னைத் தொடர்பு கொண்டு, அது பற்றி வினவுவார். அல்லது எனது வீட்டுக்கு வந்து, பேசுவார். அவர் மிகவும் நிதானமான பண்புடையவர். எவ்வாறாயினும், அவர் கட்சி விவகாரங்கள் குறித்தேனும் என்னுடன் அதிகமாகக் கதைப்பதில்லை. வேறு நபர்களுடன் கதைத்து, சில முடிவுகளை எடுக்கிறார். எனது அறிவு மற்றும் அனுபவங்களின் காரணமாக, ஒரு பெரும் தொகுதி வேலைகளை என்னால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. ஆனாலும், அது குறித்து என்னிடம் கேட்காதபோது, நான் அதில் தலையிடமாட்டேன்.

**கேள்வி:** மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று, இப்போதைய ஜனாதிபதி, தேர்தல் காலத்தில் கூறினார். ஆனாலும், 2020 நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக அவர் களமிறங்குவார் என்று, ஜனாதிபதிக்கு நெருக்கமான சில அமைச்சர்கள் கூறியுள்ளனர். இது பற்றிய உங்களது நிலைப்பாடு என்ன?

**பதில்:** எடுபிடி அமைச்சர்கள் அவ்வாறு கூறியுள்ளபோதும், ஜனாதிபதி அவ்வாறு கூறவில்லை. இந்த எடுபிடிகளின் வாய்களை மூட முடியாதுள்ளமைதான் எனக்குள்ள பெரும் பிரச்சினை. அவர்களது வாய்களை மூடிவிட வேண்டும். அல்லது அவர்களை விலக்கி விட வேண்டும். ஒரு கட்சியில் ஜனநாயகம் போன்று, ஒழுக்கமும் காணப்பட வேண்டும். ஆனாலும், அவர் மீண்டும் போட்டியிடுவார் என்று எதுவுமில்லை. அத்தோடு, அவர் அவரது வாக்குறுதியை மீறுவார் என்றும் நான் நினைக்கவில்லை. ஏனெனில், அவர் எம் அனைவருக்கும் அந்த வாக்குறுதியை வழங்கியுள்ளார். கடந்த கால வரலாற்றில் அவர் வாக்குறுதி மீறிய ஒரு அரசியல்வாதி அல்ல.

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தலின் போது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாமலாக்குவது தொடர்பிலும் பேசப்பட்டது. சோபித தேரரின் பூதவுடலின் முன்னால் நின்று அவர், அது குறித்து உறுதி கூறினார். ஆனாலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்குவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் இழுபறி நிலை தோன்றியுள்ளமை தெரிகின்றது. இது பற்றிய உங்களது கருத்து என்ன?

**பதில்:** அது குறித்து தெளிவாகக் கதைக்க வேண்டும். அதில் இரண்டு பேச்சுக்கு இடமில்லை.

**கேள்வி:** இதற்கான தடை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்துதான் வருகின்றது என்ற கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

**பதில்:** ஆம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மஹிந்தவுடன் உள்ள, இந்த அரசை குழப்புவதற்கு கனவு காண்கின்றவர்கள் உருவாக்குகின்ற பிரச்சினைதான் இது.

**கேள்வி:** உங்கள் ஆட்சிக் காலத்தில் 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாமலாக்குவதாகக் கூறியபோதும், உங்களால் அதை செய்ய முடியாது போனது. அது பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:** அதனை ரணில் விக்கிரமசிங்கதான் செய்ய விடவில்லை. இந்தப் பதவியை இல்லாமலாக்கும் எண்ணம், ஆரம்பத்திலிருந்தே என்னிடம் இருந்தது. அதனையும் விட, இன ரீதியான பிரச்சினைக்கு தீர்வைத் தேடுவதே எனக்கு மிகவும் முக்கியமாக இருந்தது. 1995 ஆகஸ்ட் ஆகும்போது, புதிய அரசியலமைப்பு சட்டமூலத்தை இந்த நாட்டுக்கு நான் முன்வைத்தேன். ஆனாலும், அதனை இன்னும் முன்னேற்றி, பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்தது, அதற்கு 05 வருடங்களுக்குப் பின்னராகும். அப்போது பாராளுமன்றத்தில் எரிக்கப்பட்ட அந்த அரசியலமைப்பின் ஒரு பகுதியில், எந்தவொரு நிபந்தனையுமின்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இல்லாமலாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனாலும், எனது இரண்டாம் தவணை (1999-2005) முடிந்ததும், இந்தப் பதவி இல்லாமலாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன், இதில் ஒவ்வொரு வசனம் வசனமாக, 33 தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தினோம். ஐக்கிய தேசியக் கட்சியின் விருப்பின் பேரில், அந்த அரசியலமைப்பின் சில பகுதிகளை நாம் மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தோம். இறுதியில் அனைவரும் உடன்படும் வகையிலான சட்டமூலத்தை உருவாக்கினோம்.

ஜனாதிபதிப் பதவியை இல்லாமலாக்குவது குறித்த பகுதி பற்றிப் பேசுகின்ற, ஒவ்வொரு தடவையும். அதனை நாம் பிறகு செய்வோம் என்று, ஐக்கிய தேசியக் கட்சியினர் பிற்போட்டனர். இறுதியில் அந்தக் கலந்துரையாடல்களுக்கு ரணில் வரவுமில்லை. கரு ஜயசூரிய, டிரான் பெர்ணான்டோ உள்ளிட்ட ஒரு குழு வந்து, இன்னும் நாம் ஒரு முடிவுக்கு வரமுடியாதுள்ளது என்று கூறிச் செல்வர். இந்தப் பகுதி குறித்து பேசுவதற்கு மட்டும் 7 தடவைகள் நான் நேரம் ஒதுக்கி நாள் குறித்தேன். நான் இந்த எல்லாக் கலந்துரையாடல்களுக்கும் சென்றேன். ஐக்கிய தேசியக் கட்சியினர், இன்னும் முடிவெடுக்கவில்லை என்றே எப்போதும் கூறினர்.

நான் இன்னும் 5 வருடங்கள் ஜனாதிபதிப் பதவியில் இருப்பதால்தான், இவர்கள் இந்த விவகாரத்தை பிற்போடுகிறார்கள் போலும் என்று எனக்குப் புரிந்தது. எனவே, நீங்கள் இதற்கு வாக்களித்தால், இன்னும் இரண்டு வருடங்களில் நான் இந்தப் பதவியிலிருந்து விலகுவேன் என்று அவர்களிடம் கூறினேன். அதற்கும் அவர்கள் சரியான பதிலை வழங்கவில்லை. பின்னர், (அப்போதைய பிரதமர்) ரத்னசிறி விக்ரமநாயக்கவை தொலைபேசியில் தொடர்புகொண்ட நான், இன்னும் இரண்டு வருடங்களில் அல்ல, நான் இன்னும் ஒரு வருடத்தில் பதவியிலிருந்து விலகுவேன். எனவே, ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தை அறிந்து சொல்லுங்கள் என்றேன். ஆனாலும், அவ்வாறு செய்ய வேண்டாம் என்று பலரும் என்னிடம் கூறினார்கள். தமிழ் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் என்னிடம் அவ்வாறு கூறினர். இனவாதி அல்லாத என்னைப் போன்ற ஒருவர் அப்போது அரச தலைமையிலிருந்து விலகினால், பெரும் பிரச்சினை ஏற்பட்டு விடும் என்று அவர்கள் கூறினார்கள்.

எப்படியோ, ஐக்கிய தேசியக் கட்சி, சரியான பதிலொன்றை வழங்கவில்லை. இந்தப் பதவியை இல்லாமலாக்குவதற்கு, நான் அவ்வாறானதொரு தியாகத்தை செய்யத் தயாரானேன். ஆனாலும், அந்த அரசியலமைப்பை பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்தபோது, ஐக்கிய தேசியக் கட்சியினர் அதனை எரித்தனர். எனது 5 வருட பதவி முடிந்ததன் பின்னர், இன்னும் 2 வருடங்கள் நான் பதவியிலிருப்பதற்கு முயற்சித்ததனாலேயே, அப்போது அந்த அரசியலமைப்புக்கு எதிராக நின்றதாக, ராஜித சேனாரத்ன அண்மையில் தெரிவித்திருந்ததை நான் பார்த்தேன். அது பொய்யாகும். அவரது அறிவிப்பை திருத்தி சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நான் எடுத்தேன். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு, என்னைப் போல் தியாகம் செய்த, அரச தலைவர் உள்ளிட்ட வேறு எவரும் இல்லை.

**கேள்வி:** 2005 ஜனாதிபதித் தேர்தலின்போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் வாய்ப்பை மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கியிருந்தீர்கள். இந்த முடிவு குறித்து இன்று என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** என் வாழ்வில் மேற்கொண்ட பெரிய பிழை இதுதான். அவர் இந்தளவு மோசமானவராக மாறுவார் என்று நான் நினைக்கவில்லை. அவரது பிழைகள் குறித்து நான் அறிந்திருந்தேன். அவர் எமது கட்சிக்கு பெருமளவு பிரச்சினைகளை உருவாக்கியிருந்தார். மஹிந்த ராஜபக்ஷ செய்த வேலைகளால்தான் எனது தாய்க்கு வெறுப்பு வந்திருந்தது. நான் அவருக்கு அமைச்சரவை அமைச்சுப் பதவியொன்றை வழங்கியபோது, அவர் பதவியேற்றதன் பின்னர் என்னிடம் வந்து, காலில் விழுந்து கும்பிட்டு, தேங்க் யூ என்று கூறினார். ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று நான் அவரிடம் கேட்டபோது, நீங்கள் என்னை அமைச்சரவைக்கு தெரிவுசெய்வீர்கள் என்று நான் நினைக்கவில்லை என்று கூறினார்.

அவர் ஏன் அவ்வாறு கூறுகிறார் என்று நான் அறிந்திருந்தேன். ஆனால், நான் பொய்யாகவே அந்தக் கேள்வியைக் கேட்டபோது, நான் பெரியவருக்கும் (சிறிமாவோ பண்டாரநாயக்க) மெடமுக்கும் (உங்களுக்கும்) ஏற்படுத்திய பிரச்சினைகள் காரணமாக, எனக்கு இந்தப் பதவி கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை என்று கூறினார். அதற்கு நான், எனக்கு நன்றி கூறத் தேவையில்லை. ஆனாலும், கட்சிக்கும் கட்சித் தலைமைத்துவத்துக்கும் கெட்ட வேலைகளைச் செய்ய வேண்டாம் என்று கூறினேன்.

**கேள்வி:** இன முரண்பாட்டுக்கு அரசியல் தீர்வு வேண்டும் என்று நாம் எப்போதும் பேசினோம். நீங்களும் அதற்காக செயற்பட்ட ஒரு அரச தலைவர். போருக்குப் பின்னர், அது குறித்து புதிய எழுச்சியொன்று உருவாக்கியிருப்பதும் தெரிகின்றது. நீங்கள் இந்தப் பின்னணியை எவ்வாறு புரிந்துகொள்கிறீர்கள்?

**பதில்:** மஹிந்தவின் காலத்தில் என்னை தலைதூக்க விடவில்லை. அக்காலத்தில் சர்வதேச மாநாடுகளுக்கு எனக்கு அழைப்புக்கள் விடுக்கப்பட்டிருந்தன. அந்த நிகழ்வுகளில் பலரும் என்னிடம் கேட்கும் கேள்வி இதுதான். அதாவது, எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு உங்களைக் கொல்வதற்குக்கூட முயற்சித்த நிலையில், நீங்கள் ஏன் இன்னும் சமாதானத்துக்காக செயற்படுகிறீர்கள்? என்று பலரும் கேட்டனர். அது ஏன் என்று கூறத் தெரியவில்லை. ஆனாலும், சமாதானத்துக்காக நான் செயற்படுகிறேன். ஒரு புறத்தில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு தேடிச் சென்று, எனது தந்தையை நான் இழந்தேன். இன்னுமொரு புறத்தில் ஜே.வி.பி. பயங்கரவாதத்தினால், எனக்கு எனது கணவன் (விஜய குமாரதுங்க) இல்லாமல் போனார். பின்னர், எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதத்தினால், எனது ஒரு கண்ணை நான் பறிகொடுத்தேன்.

| தென் பிராந்தியத்துக்கு 1000 லீற்றர், 2000 லீற்றர், 5000 லீற்றர் கொள்ள ளவுடைய பொலித்தீலேன் நீர்த்தாங்கிகளை வழங்கி, விநியோகித்தல் **ஒப்பந்த இல: RSC(S)/P&C/PE WATER TANKS/DROUGHTRELIEF/2017-64** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 62,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரண, மாத்தறை தொ.பேசி: 0412229792, தொ.நகல்: 0412224769 | 08/02/2017 14.00 மணி |
| களுத்துறை பிராந்தியத்தின் 2017 முதல் காலாண்டு தேவைக்காக பொலித்தீலேன் (PE) குழாய்கள், பொருத்திகள் மற்றும் உபகரணங்களை வழங்கி, விநியோகித்தல் **ஒப்பந்த இல: W-S/P&C/S/PE(04)/KAL/O&M /2017/14** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 30,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேற்கு தெற்கு) தே.நீ.வ.ச., இல.07, அங்குலான புகையிரத நிலைய வீதி, அங்குலானை, மொரட்டுவை தொ.பேசி: 0112224888, தொ.நகல்: 0112637945 | 16/02/2017 10.00 மணி |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்தல்** | | | | | | |
| ஹம்பாந்தோட்டை பிராந்தியத்துக்கு 6 முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்தல். (அம்பலாந்தோட்ட, வெலிவிட்ட, ஹம்பாந்தோட்டை, கதிர்காமம், ரன்ன மற்றும் தங்காலை) **ஒப்பந்த இல: RSC(S)/P&C/HAMBANTOTA REGION/THREE WHEELERS/O&M/2017-62** | 500/- + பெ.சே. வரி | முச்சக்கர வண்டி ஒன்றுக்கு ரூபா.2,500/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரண, மாத்தறை தொ.பேசி: 0412229792, தொ.நகல்: 0412224769 | 08/02/2017 14.00 மணி |
| முதன்மை பிரிவுக்கு வான் ஒன்றை வாடகைக்க அமர்த்தல் **ஒப்பந்த இல: WC/E&M/2017/04** | 1,000/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல்-மத்தி), 175ஏ, களுத்தோட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொடை தொலைபேசி/ தொலைநகல்: 0112856420-3 | 15/02/2017 14.00 மணி |
| **சேவை கேள்விகள்** | | | | | | |
| நாவலப்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்தில் அலுவலகம் மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு சேவை **ஒப்பந்த இல: RSC-C/KS/SER/O&M/NAWALAPITIYA/2017/11** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 11,750/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்தி) கெட்டம்பே, பேராதனை தொ.பேசி: 0812386068, தொ.நகல்: 0812388027 **கேள்விக்கு முன்னரான கூட்டம் 13.02.2017, 14:00 மணி** | 15/02/2017 14.00 மணி |
| **பயிற்றப்படாத பணியாளர் சேவை** | | | | | | |
| ஹம்பாந்தோட்டை பிராந்தியத்துக்கு பயிற்றப்படாத பணியாளர் சேவையை வழங்குதல் **ஒப்பந்த இல: RSC(S)/P&C/LAB/HAMBANTOTA REGION/O&M/2017-63** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 11,000/- | பயிற்றப்படாத பணியாளர் சேவை வழங்குவதில் 2 வருட அனுபவம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரண, மாத்தறை தொ.பேசி: 0412229792, தொ.நகல்: 0412224769 | 08/02/2017 14.00 மணி |
| **மானி வாசிப்பு மற்றும் நீர்க்கட்டண பட்டியல்** | | | | | | |
| உடு யட்டிநுவர நீர் வழங்கல் திட்டத்தில் நுகர்வோருக்கு மானி வாசிப்பு மற்றும் நீர்க்கட்டண பட்டியலை விநியோகித்தல் **ஒப்பந்த இல: RSC - C/KS/SER/O&M/UDU YATINUWARA/17/23** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 42,000/- | ஆவணத்தின் பிரகாரம் (கண்டி மாவட்டத்திலுள்ள நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்கப்படும்) | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்தி) கெட்டம்பே, பேராதனை தொ.பேசி: 0812386068, தொ.நகல்: 0812388027 **கேள்விக்கு முன்னரான கூட்டம் 13.02.2017, 14:00 மணி** | 15/02/2017 14.00 மணி |
| கம்பளை நீர் வழங்கல் திட்டத்தில் நுகர்வோருக்கு மானி வாசிப்பு மற்றும் நீர்க்கட்டண பட்டியலை விநியோகித்தல் **ஒப்பந்த இல: RSC -C/KS/SER/O&M/GAMPOLA/17/24** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 21,000/- | ஆவணத்தின் பிரகாரம் (கண்டி மாவட்டத்திலுள்ள நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்கப்படும்) | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்தி) கெட்டம்பே, பேராதனை தொ.பேசி: 0812386068, தொ.நகல்: 0812388027 **கேள்விக்கு முன்னரான கூட்டம் 13.02.2017, 14:00 மணி** | 15/02/2017 14.00 மணி |

தகுதித்தன்மைக்கான சான்றுகளுடன் வியாபாரக் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும். மற்றும் **இறுதித் திகதிக்கு முன்னைய நாள் வரை** சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

கேள்விகள் மூடப்பட்டவுடனேயே சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். **தாமதமாக விலைமனு சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.**

**தவிசாளர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்**

# வில்பத்துக்காணியை முஸ்லிம்கள் ஒருபோதும் அபகரிக்கவில்லை

## காத்தான்குடி மீடியா போர உறுப்பினர்களிடம் அமைச்சர் றிஷாத் பதியுதீன்

(மட்டக்களப்பு நிருபர்)

வில்பத்துக்காணியை முஸ்லிம்கள் ஒரு போதும் அபகரிக்கவில்லை என வர்த்தக வாணிபத்துறை அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடி மீடியா போரத்தின் உறுப்பினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மறிச்சுக்கட்டி மற்றும் அங்குள்ள பிரதேசங்களுக்கு சென்று மக்களை சந்தித்த பின்னர் அமைச்சர் றிசாத் பதியுதீனையும் சந்தித்து அங்குள்ள நிலவரங்களை கேட்டறிந்து கொண்டனர்.

இதன் போதே அமைச்சர் றிசாத் பதியுதீன் மேற்கண்டவாறு கூறினார். இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் வில்பத்து என்பது மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்ததல்ல.

மன்னார் மாவட்டத்திலுள்ள மறிச்சுக்கட்டி மற்றும் கரடிக்குழி, பாலக்குழி போன்ற பிரதேசங்களில் மீளக்குடியேறுகின்ற முஸ்லிம் கிராமங்களையும் கத்தோலிக்க கிராமங்களையும் சேர்த்துத்தான் பல ஊடகங்களும் தெற்கிலே இருக்கின்ற இனவாத சிந்தனை கொண்ட அமைப்புக்களும் சேர்ந்து ஒரு பிழையான தகவலை நாட்டுக்கும் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் திணித்திருக்கின்றார்கள்.



அதில் வில்பத்தை முஸ்லிம்கள் ஆக்கிரமத்திருக்கின்றார்கள். வில்பத்துக் காட்டை அழிப்பதாகவும் முஸ்லிம்கள் அங்கு குடியேறுவதாகவும் அப்பட்டமான பொய்ச் செய்திகளைத்தான் கடந்த காலங்களில் கூறி வந்தார்கள். வில்பத்து என்பது இந்த நாட்டிலே இருக்கின்ற வண ஜீவராசிகள் திணைக்களத்திற்கு சொந்தமான பெரும் காடாகும்.

இந்த வில்பத்து பிரதேசம் அநுராதபுர மாவட்டத்திலும் புத்தளம் மாவட்டத்திலும் வரும் ஒரு பகுதியாகும். இது மன்னார் மாவட்டத்திற்குள் ஒரு போதும் வரவில்லை. மன்னாரையும் புத்தளத்தையும் பிரிக்கின்ற எல்லைதான் வில்பத்தாகும்.

அந்த எல்லையிலிருந்து ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால்தான் முஸ்லிம் கிராமங்களும் கத்தோலிக்க கிராமமும் அமைந்திருக்கின்றன. இந்தக் கிராமங்களில் முஸ்லிம்கள் மீளக்குடியேற வந்த போது அந்த மக்களுடைய ஆயிரம் ஏக்கர் காணியினை பாதுகாப்பு படையினர் தங்களது இருப்புக்காக எடுத்துக் கொண்டதனால் சில புதிய கிராமங்களை பாதையோரங்களில் அமைக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டது. இந்த தேவைப்பாட்டை நானோ அல்லது என்னுடைய மக்களோ செய்யவுமில்லை பலவந்தமாக குடியேறவில்லை.

அவர்களது காணிகள் வனவளத்திற்கு சொந்தமானது 2012ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் புத்தளத்தில் வாழ்ந்த போது யாருக்குமே தெரியாமல் கிராம சேவையாளருக்கோ பிரதேச செயலாளருக்கோ அல்லது இந்த மாவட்டதை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் வாதிகளுக்கோ பாராளுமன்றத்திற்கோ மற்றும் அமைச்சரவைக்கோ தெரியாமல் அமைச்சர் ஜி.பி.எஸ். உபகரணங்களைப் பயன்படுத்தி மிகவும் சிறுபிள்ளைத்தனமாக அத்தனை காணிகளையும் வனவளத்திற்கு சொந்தமான காணிகள் என கொழும்பில் இருந்து கொண்டு வர்த்தமானி பிரகடனம் செய்துள்ளார்.

இவ்வாறு இந்தக் காணிகள் வர்த்தமானி பிரகடனம் செய்ததால்தான் இன்று இந்தக் காணிகள் வனவளத்திற்கு சொந்தமானகாணிகள் என சிலர் வாதாடுகின்றனர்.

சிலரை பயன்படுத்தி சிங்கள முஸ்லிம்கள் மக்கள் மத்தியில் கலவரத்தினை ஏற்படுத்துகின்ற நல்லுறவை சீர்குலைக்க எடுக்கும் சதியாக இந்த நடவடிக்கையை நான் பார்க்கின்றேன். முசலி பிரதேச செயலாளர் பிரிவில் மீளக்குடியேறியிருக்கின்ற முஸ்லிம்கள் வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளையோ அல்லது வனபரிபாலனத்திற்கு சொந்தமான காணிகளிலோ குடியேறவில்லை.

இந்த மக்களுடைய சொந்த மண்ணிலே தாய்தந்தையர் வாழ்ந்த பூர்வீகமான காணிகளிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். கிழக்கு மாகாணத்திலுள்ள காத்தான்குடி மீடியா போரத்தின் வடக்கு நோக்கிய பயணத்தில் வில்பத்து மறிச்சக்கட்டி முஸ்லிம்களை இதன் போது சந்தித்து கலந்துரையாடினார்.

## விவசாய உபகரணங்கள் வழங்கிவைப்பு



(வாழைச்சேனை நிருபர்)

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று மட்டக்களப்பு மன்முனை வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலக பிரிவுகளிலும் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் அதிதிகளாக பிரதி அமைச்சரின் இணைப்பாளர் ஜோன் பாஸ்டர், பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ஜதிஸ்குமார் பனை அபிவிருத்தி சபை அதிகாரி விஜயன், மற்றும் பயனாளிகளும் கலந்து சிறப்பித்தனர்.

## சீரற்ற காலநிலைகளில் மக்களை பாதுகாப்பது அரசின் கடமையாகும்

(கோணாவத்தை றிபாஸ்)

ஒரு அரசின் முதன்மைக் கடமையானது இயற்கையினால் ஏற்படுகின்ற விளைவுகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதேயாகும் மழை பெய்கின்றபொழுது வெள்ளம் வராமல் அதற்குரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் கோடையினால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படாது மேம்படுத்துவதும் எமது தலையாய கடமையாக இருக்க வேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுடீன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கிழக்கு மாகாண சபை அமர்வில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மழையை நம்பி விவசாயம் செய்வது என்பது 21ஆம் நூற்றாண்டின் ஒரு நடைமுறையாக இனிமேலும் இருத்தல் முடியாது. இவ்வாறான விவசாயிகளுக்கு வருடம் தோறும் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது எம்மீது பொறுப்பாக்கப்பட்டுள்ளது. நீர்சேமிப்பிற்குரிய குளங்களை அமைப்பதற்கான தேவைப்பாடு இன்னும் கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்றது. பண்டைய காலத்து மன்னர்கள் குளங்களை அமைப்பதற்கும் நீரினை முறையாக செலுத்துவதற்கும் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் சிரமங்களையும் நாம் நன்றாக அறிவோம். எனவே நிவாரணப் பணிகளை மேற்கொள்வதுடன் எதிர்கால தடுப்பு நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த வேண்டிய தேவைப்பாடு எமக்கு உள்ளது என்றார்.

# முஸ்லிம் சமூகம் ஆன்மீகம் தொடர்பாக குழுக்களாகப் பிரிந்து நிற்பதே பலவீனம்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு





(கோணாவத்தை றிபாஸ் ஏ.எல்.எம் சலீம்)

இன்று முஸ்லிம் சமூகம் ஆன்மீகம் தொடர்பாக குழுக்களாகப் பிரிந்து நிற்பதுதான் மாபெரும் பலவீனமாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். தர்பியதுல் அதான் (பாங்கு சொல்வது தொடர்பான பயிற்சி) ஆரம்ப நிகழ்வு (28) நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர் பாடசாலையில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த ஆட்சியாளர்களின் காலத்தில் ஒலி பெருக்கியின் ஊடாக பாங்கு சொல்வது ஒரு அரசியல் சர்ச்சையாக வந்தது. மட்டுமல்லாது இந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் ஒரு வழக்குத் தீர்ப்பின் மூலம் ஒலி பெருக்கியில் பாங்கு சொல்வதற்கு சில கட்டுப்பாடுகளை விதித்த போது முழு முஸ்லிம் சமூகமும் கிளர்ந்தெழுந்த ஒரு நிலைமையை நாம் கண்டோம். இதற்கு ஏட்டிக்குப் போட்டியாக மாற்று சமூகத்தின் தீவிரப் போக்குள்ளவர்களும் இவ்விடயத்தை தூக்கிப் பிடித்துக் கொண்டு பெரும் அரசியல் சர்ச்சையாக உருவெடுத்ததென்பதும் எமது அண்மைக்கால வரலாறாகும்.

அந்த வகையான நிலைவரங்கள் தற்போது தீர்ந்திருக்கின்றன என்று கூறலாம். இவ்வாறான பாங்குக்குரிய உச்ச நீதிமன்ற சர்ச்சையினை ஆராய்ந்து பார்க்கின்ற போது அதற்கு அடிப்படையாக இரண்டு பள்ளிவாசல்களின் நிர்வாகத்தினருக்கிடையிலான சிக்கலே காரணமாக காணப்பட்டது. இந்த இரு பள்ளிவாயல் நிர்வாகத்தினரால் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்கினை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி மேலும் பல உள்ளீடுகளை செய்து மிக விபரீதமான முடிவாக அந்த வழக்குத் தீர்ப்பு அமைந்தது. இன்று நமது சமூகம் ஆன்மீகம் தொடர்பாக குழுக்களாகப் பிரிந்து நிற்பதுதான் மாபெரும் பலவீனமாகும்.

இஸ்லாமிய சமூகம் அடிப்படையிலே மறந்து செயற்படுகின்ற ஒரு விடயம் காணப்படுகின்றது. அதனை நாம் முதலிலே வளர்த்துக் கொள்ள வேண்டும். சகிப்புத் தன்மை, பொறுமை ஆரம்ப கால இஸ்லாமியர்களிடத்தில் இருந்திருக்கா விட்டால் இஸ்லாம் வளர்ந்திருக்கவே முடியாது. உடல் ரீதியான இம்சைகளை பொறுத்துக் கொள்கிற, சகித்துக் கொள்கிற உச்சக்கட்டப் பொறுமை என்பது ஆரம்ப காலத்தில் இருந்ததனால்தான் இஸ்லாத்தினுடைய வளர்ச்சி என்பது சாத்தியமானது என்பதை நாங்கள் உளங்கொள்ள வேண்டும்.

இந்த நிகழ்வில் சுகாதார பிரதி அமைச்சர் பைசால் காசிம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஆரீப் சம்சுதீன், ஏ.எல். தவம், ஏ.எம்.றஸாக் மற்றும் கட்சி பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.





கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா வித்தியாலயத்துக்கு 2017 ஆம் ஆண்டுக்கான புது மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது அதிதியாக கலந்துகொண்ட கம்பஹா கல்வி வலய ஆரம்பப்பிரிவு ஆசிரியர் ஆலோசகர் எம்.எம்.கே.மௌபியா அதிபர் எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா பிரதி அதிபர்களான ரிஸ்னா இக்ரம், பர்ஹத் பஹ்மிதா ஆகியோரால் வரவேற்கப்படுவதையும் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட சிறுமிகளையும் படங்களில் காணலாம்.










தேசிய சகவாழ்வு மற்றும் தலைமைத்துவ இளைஞர் மாநாடு 2017 சிமாட் ஒப் ஸ்ரீலங்கா அமைப்பின் தலைவர் கே.ஆர்.எம்.றிஸ்கான் தலைமையில் சாய்ந்தமருது லீமெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வுக்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், சனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்கத் தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல், அரசகரும மொழிப்பெயர்ப்பு அமைச்சருமான மனோ கணேசன் பிரதம அதிதியாகவும், அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவரும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் பிரதி தலைவருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீல், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜீம், கிழக்கு பிராந்திய கட்டளைத் தளபதி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே. அரசரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதிக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் ரஜீவ் காந்தியை துப்பாக்கியால் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்ட கடற்படை வீரரான இவர் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆயுட்காலம் தொடர்பாக கணிப்பொன்றை கூறியிருந்தார்.

இந்நிலையிலேயே மக்களை திசைதிருப்பும் இவ்வாறான போலி கணிப்புக்களை கூறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே பிரதமர் ரணில் விக்ரமசிங்க பிரதமராதல், அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால் டிரம்ப் தெரிவு செய்யப்படுவார் போன்ற கணிப்புகளை இவர் சரியாக கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

## டெங்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உயிர்கொல்லி டெங்கு நோயை ஒழிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்திட்டங்களை மேலும் பலப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய செயற்திட்டம் வெற்றிபெறுவதற்கு நாட்டு மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேசிய பல் மருத்துவமனையின் (போதனா) முதற் கட்டமான புதிய கட்டிடத் தொகுதி திறந்து வைத்தல் மற்றும் இரண்டாம் கட்ட கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்று (31) கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த ஜனாதிபதி,

இலவச மருத்துவ சேவையைப் பலப்படுத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட புதிய மருத்துவமனைகளை எதிர்காலத்தில் மக்களுக்கு உரித்தாக்க அரசாங்கம் தயாராக இருப்பதோடு, மக்களைப் பாதுகாப்பதற்காக சுகாதாரத் துறைக்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க நடவடிக்கை எடுகின்றது.

மருத்துவ நிபுணர்கள் மற்றும் தாதியர்களின் பற்றாக்குறை சுகாதார துறையில் பாரதூரமான நெருக்கடியாக இருக்கிறது.

சுகாதார அமைச்சராக நான் இருந்தபோது சுகாதார துறையின் உயர்வுக்காக மேற்கொள்ள முற்பட்ட சில திட்டங்களை அமுல்படுத்துவதற்கு இடமளிக்கப்படவில்லை. மருத்துவர்களுக்கு சேவை நிலையங்களை வழங்கும் போது ஜனாதிபதி அழுத்தம் கொடுப்பதாக செய்யப்படும் பிரச்சாரத்தை பலமாக நிராகரிகின்றேன். அத்துடன், மிகச் சிறந்த மக்கள் சேவையை வழங்குவதற்கு தேவையான சுதந்திரம், தன்னால் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, தேவையற்ற தலையீடுகள் இன்றி அவர்கள் செயற்பட முடியும் என தெரிவித்தார்.

1200 மில்லியன் ரூபா செலவிலான ஒன்பது மாடி கட்டிடத் தொகுதியை மக்களுக்கு உரித்தாக்கி, நினைவுப்பலகையை திறந்து வைத்தார். புதிய கணனி மென்பொருள் ஊடாக முதலாவது நோயாளியைப் பதிவு செய்தார்.

பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ கலாநிதி ஜயசுந்தர பண்டார அவர்களால் ஜனாதிபதி அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

வெள்ளவத்தை விஜயாராமாதிபதி வணக்கத்துக்குரிய அஹங்கம ஆனந்த தேரர், தேசிய மருத்துவமனை ஆளணி பணிப்பாளர் பண்டித ரஜவெல்லே சுபூதி தேரர் உள்ளிட்ட மதகுருமார்களும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, பிரதியமைச்சர் பைஷால் காஷிம், அமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்ரம, தேசிய பல் மருத்துவமனை பணிப்பாளர் புஸ்பா கம்லத்ஹே ஆகியோர் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சைடம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை வைத்திய சபை மறுப்பதாக குற்றம்சாட்டி, சில மாணவர்கள் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிகளான விஜித் மலலேகொட, எஸ்.துரைராஜா ஆகிய இருவரும் குறித்த உத்தரவை வழங்கியதோடு, மல்சானி சுரவீர ஆரச்சி மற்றும் திலும் சூரிய ஆரச்சி ஆகிய இரு மாணவர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி விஜித் மலலேகொட கூறியதாவது,

சைடம் நிறுவனம் வைத்தியப் பட்டத்தை வழங்குவது சட்டவிரோதம் என பிரதிவாதிகள் தரப்பான இலங்கை வைத்திய சபையால் சில ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவை அனைத்தையும் நிராகரிப்பதாகவும், உயர் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு அமைய சைடம் நிறுவனத்திற்கு மருத்துவப் பட்டத்தை வழங்க சட்டப்படி உரிமை உள்ளது. இதற்கமைய சயிடம் நிறுவனத்தில் மருத்துவ பட்டம் பெற்ற மாணவர்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டார்.

இதேநேரம், மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி சட்டபூர்வமாக்கப்பட்டமைக்கு எதிராக அளுத்கடை நீதிமன்ற கட்டடத் தொகுதி முன்னிலையில் வைத்திய மாண மாணவிகளின் சங்கம் அமைதி எதிர்ப்பு போராட்டத்தை நேற்றைய தினம் முன்னெடுத்திருந்தனர்.

அத்தோடு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பெற்றுகொடுக்கப்பட்ட இந்த உத்தரவு தொடர்பில் எதிர்வரும் நாட்களில் தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியான சயிடம் நிறுவனத்திற்கு எதிராக கடந்த வருடம் முழுவதும் மருத்துவ கல்லூரி மாணவர்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்திய முஸ்லிம் லீக் தலைவர் பாராளுமன்றில் மயங்கிவிழுந்தார்

(சாஹுல் ஹமீது, திருச்சி)

இந்திய குடியரசு தலைவர் உரையின் போது, பாராளுமன்றஅவைக்குள் திடீரென, முன்னாள் அமைச்சரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் எம்.பியுமான அகமது மயங்கி சாய்ந்தார். உடனடியாக அவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று தொடங்கி உள்ள நிலையில், நடப்பாண்டின் முதல் கூட்டத் தொடர் இது என்பதால், பாராளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி உரை நிகழ்த்தினார்.

ஜனாதிபதி உரை காலை 11 மணியளவில் ஆரம்பித்தது. சுமார் ஒன்றேகால் மணி நேரம் ஜனாதிபதி உரையாற்றினார். அப்போது, பாராளுமன்ற அவைக்குள் திடீரென, முன்னாள் அமைச்சரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் எம்.பியுமான அகமது மயங்கி சாய்ந்தார்.

உடனடியாக அவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மயக்கத்திற்கான காரணம் என்ன என்பது குறித்து இன்னும் தெரியவில்லை. வைத்தியர்கள் அவருக்கு பரிசோதனைகளுடன் சிகிச்சை மேற்கொண்டு வருகிறார்கள்.

## ட்ரம்பின் உத்தரவை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முடியாது, இதற்காக வாதாடக் கூடாது எனக் கூறியிருந்தார். இதனையடுத்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

மேலும், ஒபாமா நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட சாலி யேட்ஸ், டிரம்ப் உத்தரவுக்கு எதிரான சட்ட ரீதியிலான சவால்களை எதிர்க்க முடியாது என்று அறிவித்து நீதித்துறைக்கு அவர் துரோகம் இழைத்துவிட்டதாகவும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. அவருக்கு பதில், டானா போன்டே என்பவர் அட்டர்னி ஜெனரலாக (பொறுப்பு) நியமிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அட்டர்னி ஜெனரலை அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுதி செய்யும் வரை இவர் பதவி வகிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அட்டர்னி ஜெனரல் பதவிக்கு ஜெப் செசன்ஸ் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

## அரசியலமைப்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செயற்படக்கூடாது என்று ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத் கோரிக்கைவிடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத் நாடளாவிய ரீதியில் நடத்திவந்த தீவிரவாத எதிர்ப்பு மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மாணங்களிலே மேற்படி கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத்தின் தீவிரவாத எதிர்ப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மாணங்களில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவு,

முஸ்லிம்கள் தீவிரவாதத்தை ஆதரிப்பவர்கள் இல்லை என்பதையும் தீவிரவாத்திற்கும் இஸ்லாத்திற்கும் எந்தவகையிலும் தொடர்பில்லை. இஸ்லாம் மற்றும் அல்குர்ஆன் விடயத்தில் இனவாதிகளோ அல்லது வேறு எவருமோ முறைப்படி கேள்விகள் தொடுப்பார்களாயின் அதற்கு தக்க முறையில் பதில் கொடுப்பது காலத்தின் கட்டாயமாகும்.

இலங்கை நாட்டிற்கான புதிய அரசியலமைப்பு மாற்றம் தொடர்பிலான செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை முஸ்லிம்களின் இருப்பு, பாதுகாப்பு, உரிமைகள், எதிர்காலம், அபிவிருத்தி, கல்வி தொடர்பில் விஷேட கவனமெடுக்க வேண்டியுள்ளது. உத்தேச யாப்புத் திருத்தங்களில் தேர்தல் முறை மாற்றம், இனப்பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரப் பகிர்வு ஆகிய அம்சங்கள் இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் ஆபத்தானவையே. குறிப்பாக உத்தேச யாப்பு மாற்றத்தின் அடிப்படை அம்சமான தேர்தல் முறை மாற்றம் இலங்கை முஸ்லிம்களுக்கு மிகவும் ஆபத்தானது. வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு உத்தேச தேர்தல் மாற்ற முறையாக கூறப்படுகின்ற கலப்பு தேர்தல் முறை பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தப்போவதில்லை. 70 வீதமான தொகுதிவாரி முறையுடன் கூடிய உத்தேச புதிய தேர்தல் முறை பெருமளவில் முஸ்லிம்களைப் பாதிக்கின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையின் ஊடாக இருபத்தி இரண்டு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைத்துக் கொண்டிருப்பது இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் மிகப் பாதுகாப்பானதாகும். இதற்கு மாற்றமான மேற்படி திருத்தங்களை இம்மாநாடு கண்டிக்கின்றது.

இலங்கையின் 1978ஆம் ஆண்டு யாப்பில் அடிப்படை உரிமைகள் என்ற அத்தியாயத்தில் யாப்பு ரீதியாக பாதுகாப்பு அளிக்கப்பட்ட உறுப்புரிமை 12ல் இனம், மொழி, மதம், சாதி, பால், அரசியல் கொள்கை அல்லது பிறப்பியல் காரணமாக எந்தப் பிரஜைக்கும் பாரபட்சம் காட்டப்படலாகாது. உறுப்புரை 14 (உ) வில் தனியாக அல்லது மற்றவருடன் சேர்ந்து பகிரங்கமாகவேனும் அல்லது அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ நம்பிக்கையோ வழிபாட்டிலும் போதனையிலும் ஈடுபட வெளிக்காட்ட சுதந்திரம் உண்டு எனக் கூறுகிறது.

மேற்படி யாப்பில் உரிமைகள் உத்தரவாதப் படுத்தப்பட்டும் கடந்த ஆட்சிக் காலத்தில் மேற்சொன்ன பிரச்சினைகளை முஸ்லிம்கள் மோசமாக எதிர்நோக்கினர். இதன்மூலம் எந்தவொரு காலத்திலும் முஸ்லிம்களின் தனியான இருப்பை, சுதந்திரத்தை எந்தவகையிலும் கேள்விக்குறியாக்காமல் இவ்வரசு செயற்பட வேண்டும் என இம்மாநாடு கோரிக்கை வைக்கின்றது.

## சு.க. – ஐ.தே.க...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்சி கூட்டு தொடரும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறி ஐ.தே.க. வினைத் தவிர்த்து அரசாங்கம் ஒன்றை அமைக்கப் போவதாக பரவலாக வதந்திகள் பரவி வரும் நிலையிலேயே ஜனாதிபதி அமைச்சரவையில் இந்தக் கருத்தினை வெளியிட்டதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் நவமணிக்குத் தெரிவித்தார்.

இதேநேரம் ஐ.தே.க. வுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே உள்ள கருத்து முரண்பாடுகளைக் களைவதற்காக அரசாங்கத்தில் சில மாற்றங்கள் செய்வது அவசியம் என ஜனாதிபதி கருதுகிறார் என்றும் அந்த அமைச்சர் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுவிட்சர்லாந்து விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய தினத்தன்று ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது அமைச்சரவையில் சில மாற்றங்கள் செய்யப்படுவதன் அவசியம் பற்றி தெரிவித்திருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இரு கட்சிகளுக்குமிடையே சில விடயங்களில் நிலவும் கருத்து முரண்பாடுகள் களையப்படுவது அரசின் உறுதியான பயணத்துக்கு உந்து சக்தியாக அமையும் என்றும் ஐ.தே.க. வின் சிரேஷ்ட அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சீ.வி. விக்னேஷ்வரனை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரர் குறிப்பிட்டார்.

கிருலப்பனையில் அமைந்துள்ள பலசேனா தலைமையகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இக்கருத்தினை முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு தற்போது வேறு ஒரு திசையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. வடக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் அங்கு எந்தவிதமன அரச திணைக்களங்களோ மத்திய அரசின் தலையீடுகளோ இல்லை. அப்படியான தலையீடுகளும் அங்கு செல்லுபடியாவதில்லை.

சொல்லப்போனால் தனியானதொரு இராஜ்ஜியம் போன்றே வடக்கு மாகாணத்தின் களநிலவரங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான இனவாத செயற்பாடுகளை மேற்கொள்ளும் வடக்கு முதல்வரைப் போன்று தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தற்போது செயற்பட்டு வருகிறார். இவரும் ஒரு தமிழ் இனவாதியே. இது தான் நல்லாட்சியா?

அத்தோடு, கொழும்பை கேந்திரமாகக்கொண்ட சிங்கள வியாபாரிகளின் சொத்துகளும் பொதுமக்களின் பணத்தையும் உள்ளடக்கிய வகையில், கச்சிதமாக மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவமாகவே இந்த பிணை முறி விவகாரம் பார்க்கப்படுகின்றது. இவ்விவகாரம் பாரிய பிரச்சினையாகிவிடும் என்ற காரணத்தினால் தான் அரசும் இதுவிடயத்தில் அமைதி காத்துவருகின்றது.

இந்நிலையில், இவ்விவகாரத்தில் தொடர்புடைய அர்ஜுன் அலோசியஸ் பிரபல ஊடகமொன்றை விலலைகொடுத்து வாங்கியுள்ளார் என்று தற்போது தெரிய வந்துள்ளது. நாட்டு மக்களின் பணத்தை கொள்ளையடித்து வாங்கப்பட்ட அந்த ஊடகம் எது என்பதை அரசு உடனடியாக மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றார்.

## நல்லாட்சி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒருங்கிணைந்த எதிரணியின் உறுப்பினருமான உதய கம்மன்பில நேற்று தெரிவித்தார்.

அத்தோடு, அரசானது நுகேகொடையில் ஏற்பட்ட மஹிந்த சூறாவளியைக் கண்டு தற்போது அஞ்சியுள்ளதாகவும் அவர் கூறினார்.

கோட்டையில் அமைந்துள்ள தமது கட்சித் தலைமையகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டு எதிரணியினரால் நுகேகொடையில் நடத்தப்பட்ட கூட்டம் தொடர்பிலேயே அரசு தற்போது தீவிரமாக கதைத்துவருகின்றது. இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியமானதொரு கூட்டமாக பார்க்கப்படும் இது, நாம் எதிர்பார்த்தைவிடவும் வெற்றியளித்துள்ளது என்றே கூறவேண்டும்.

எனினும், இந்த நல்லாட்சி அரசோ இந்தக் கூட்டம் தோல்வியடைந்து விட்டதாக தொடர்ந்தும் கூறிவருகின்றது. அரசின் இந்தக் கருத்திலேயே இந்தக் கூட்டம் வெற்றிபெற்று விட்டது என்பது தெளிவாகின்றது. இதன்மூலம் மஹிந்த சூறாவளியைக் கண்டு அரசு அஞ்சுகிறது என்பதே அர்த்தமாகும்.

அத்தோடு, இந்த அரசானது தற்போது எதற்கெடுத்தாலும் கோட்டாபய ராஜபக்ஷவை குறிவைத்துதான் கருத்துக்களை வெளியிடுகின்றது. ஊடகவியலாளர் லசந்தவின் மரணம் உள்ளிட்ட பல மரணங்கள், கடத்தல்களுக்கெல்லாம் தேவையில்லாமல் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாவின் பெயர் பயன்படுத்தப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றபோது, லசந்தவின் மரணம் தொடர்பில் தற்போது அமைச்சராக இருக்கும் சரத்பொன்சேகாவும் பொறுப்புக் கூறவேண்டும் என்று பாராளுமன்றில் வைத்து கருத்தொன்றை வெளியிட்டிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் சபையில் உரையாற்றும்போது மிகவும் நிதானத்துடனும் பொறுப்புடனும் தான் உரையாற்றுவார்;. தனக்கும் இந்த படுகொலை தொடர்பில் ஏதோ ஒரு தகவல் தெரிந்துள்ளது என்பதையே அப்போது ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தியுள்ளார். ஆனாலும், இன்றுவரையிலும் இந்த படுகொலை தொடர்பில் அவரிடம் எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேநிலைமை தொடர்ந்தால், ரவிராஜின் வழக்குக்கு ஏற்பட்ட கதிதான் லசந்தவின் விவகாரத்திலும் ஏற்படும். எனவே, அரசு கோட்டாபோபியா நோயிலிருந்து விடுபட்டு, உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

## இலங்கை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பொரள்ளையில் அமைந்துள்ள என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் நேற்றைய தினம் கூட்டு எதிரணியின் வாராந்த செய்தியாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினரான டலஸ் அழகப்பெரும,

இலங்கைக்கு எதிராக கடந்த காலங்களில் கடுமையான குற்றச்சாட்டுக்களையும் பிரேரணைகளையும் முன்வைத்த வந்த நிஸா பிஸ்வால், சமந்தா பவர் உள்ளிட்ட முக்கிய நான்கு உறுப்பினர்களையும் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மாற்றியுள்ளார்.

அமெரிக்காவில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து தாம் வெளிநாடுகளின் விவகாரங்களில் தலையிடப் போவதில்லை என்றும் தமது நாட்டின் பொருளாதாரம், மனிதவுரிமை மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட விடயங்களில் மாத்திரமே இனிமேல் கவனம் செலுத்தவுள்ளதாகவும் புதிய ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

எனவே, தொடர்ச்சியாக இலங்கை விவகாரத்தில் தலையிட்டுவரும் அதுல் கேஸாப், இனிவரும் காலங்களிலேனும் இலங்கையின் இறையாண்மையில் தலையிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றுக் குறிப்பிட்டார்.

அதேநேரம், இதில் கலந்து கொண்டிருந்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவரும் ஒருங்கிணைந்த எதிரணித் தலைவருமான தினேஷ் குணவர்தன,

உள்நாட்டு விதிமுறைகளுக்கு மாறாகவே யாழ்ப்பாணத்தில் வெளிவிவகார பிராந்திய காரியாலயமொன்றை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர திறந்துவைத்துள்ளார். இலங்கையில் சகலருக்கும் பொதுவாகத் தான் கொழும்பில் வெளிவிவகார அமைச்சொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் அனைத்து விடயங்களையும் பூர்த்திசெய்துக்கொள்ள முடியும்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் வெளிவிவகார பிராந்தியக் காரியாலயமொன்று விதிமுறைகளை மீறி நிறுவப்பட்டுள்ளதால் அங்கு சர்வதேச நீதித்துறை மற்றும் இராஜதந்திர நவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இது பாதூரமான விடயமாகவுள்ளது.

அத்தோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை முன்னாள் போராளிகள் கொலை செய்ய திட்டமிடப்பட்டுள்ளமை தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளை முன்பு போன்று வலையமைப்பாக மீண்டும் கட்டமைத்து பாரிய வேலைத்திட்டங்களை சர்வதேசத்தினர் முன்னெடுத்து வருகின்றனர் என்பது இதன் மூலம் தெரியவந்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் தவறான கொள்கைகளும், அறிக்கை வெளியீடுகளுமே சுமந்திரன் எம்.பியை இவர்கள் குறி வைக்க காரணமாகும். அவரின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது அரசின் கடமையாகும். நாங்கள் புலிகள் மூலம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறிய போது விடுதலைப் புலிகள் மீண்டும் எழுச்சிப்பெற முடியாது என்று தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்றும் அரசு அறிவித்திருந்தது.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே விடுதலைப் புலிகள் தலைத்தூக்கியுள்ளதாக முறைப்பாட்டை பதிவு செய்துள்ளது. இது தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. எனவே, தலைத்தூக்கியுள்ள விடுதலைப் புலிகளின் விவகாரம் தொடர்பில் அரசு உடனயாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுத் தெரிவித்தார்.

## அக்குறணை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வைக்கப்பட்டிருந்த அக்குறணை அல் - அஸ்ஹர் தேசிய கல்லூரி பிரதி அதிபர் நேற்று பிணையில் விடுக்கப்பட்டார்.

கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் லால் பண்டார முன்னிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, பிரதி அதிபர் ருகையா உம்மா பத்தாயிரம் ரூபா காசுப் பிணையிலும் ஒரு இலட்சம் ரூபா இரு சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்டார்.

பிரதி அதிபர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனில் டி சில்வா குறிப்பிட்ட பணம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தீர்மானத்திற்கு ஏற்ப தளபாடங்களை வாங்குவதற்காக அறவிடப்பட்டதாகவும் இதனை பாடசாலை நிர்வாகமும் அபிவிருத்திச் சங்கமும் உறுதிப்படுத்துவதாகவும் இங்கே இலஞ்சம் பெறப்படவில்லை என்றும் வாதிட்டார். பிரதி அதிபரின் மகனது திருமணம் ஐந்தாம் திகதி இருப்பதனால் பிணை வழங்குமாறு நீதிமன்றத்தில் வாதாடினார். இதனை கவனத்தில் கொண்ட நீதவான் பிரதி அதிபரை பிணையில் விடுவிப்பதாக அறிவித்தார்.

வழக்கு விசாரணையின் போது அக்குறணை அல் - அஸ்ஹர் மகாவித்தியாலய பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் பெருந்தொகையானோர் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி அனில் டி சில்வா, சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம். சஹீத், பிரதி அதிபர் சார்பில் ஆஜராகினார்.

வழக்கு விசாரணை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## நாமல் உள்ளிட்ட...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் புதல்வரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்சவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணை இன்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

வாக்குமூலம் பெறுவதற்காக அனுப்பட்ட அழைப்பாணைகளை நாமல் ராஜபக்ச நிராகரித்ததன் மூலம் ஆணைக்குழுவை அவமதித்ததாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

கடந்த வழக்கு விசாரணையில் நாமல் ராஜபக்சவிற்கு எதிரான குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்ட போது அதனை அவர் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ட்ரம்பின் வெளிவிவகார...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

டொனால்ட் டிரம்ப் அதிரடி செயற்பாடுகள் சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசியலில் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் சர்வதேச கொள்கை வேறு பல நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தினாலும் இலங்கை இந்தியாவுக்கு அயல்நாடாக இருப்பதால் மாற்றங்கள் சாதகமானதாகவே அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக பேராசிரியர் ஜெஹான் பெரேரா மேலும் தெரிவித்ததாவது,

டொனால்ட் டிரம்ப் இந்தியாவில் அதிக ஆர்வம் காட்டிவருகின்றார். இலங்கை இந்தியாவுக்கு அண்டை நாடு. இந்தியாவோடு இலங்கையையும் சமமாக பார்க்கும் நிலை ஏற்படும். அமெரிக்கா இலங்கையை இக்கட்டான நிலைக்கு தள்ளிவிடாது என்று எதிர்பார்க்கலாம். ஜெனீவாவின் இலங்கை விடயத்திற்கும் இப்போது அமெரிக்கா தலைமை வகிப்பதில்லை. அமெரிக்காவின் புதிய கொள்கைகளில் வேறு பல நாடுகளும் நெருக்கடிகளை சந்தித்தாலும் இலங்கைக்கு அவ்வாறான நிலை ஏற்பட வாய்ப்பில்லை- என்றார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்



இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இம்மாதம்

## அவுஸ்திரேலிய டி20 தலைவராக பின்ஞ்ச்

17ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள 3 போட்டிகளைக் கொண்ட டி20 தொடரில் அவுஸ்திரேலிய அணியின் தலைவராக அவ்வணியின் அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஆரோன் பின்ஞ்ச் நியமிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது.

கடந்த 2014 முதல் 2016ஆம் ஆண்டு வரை அவுஸ்திரேலிய டி20 அணியின் தலைவராகச் செயற்பட்ட 30 வயதான பின்ஞ்ச், கடந்த வருடம் இந்தியாவில் நடைபெற்ற டி20 உலகக்கிண்ணத் தொடரினையடுத்து அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நேற்றுமுனதினம் ஆரம்பமான ஒருநாள் தொடரில் அவுஸ்திரேலிய அணியின் 24ஆவது ஒருநாள் தலைவராக ஆரோன் பின்ஞ்ச் செயற்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கையுடனான டி20 தொடரில் அவுஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளராக ஜஸ்டின் லேங்கர் செயற்படவுள்ளதுடன்,ஜேசன் கிளெப்ஸி பந்து வீச்சுப் பயிற்சியாளராகவும், ரிக்கி பொண்டிங் துடுப்பாட்ட பயிற்சியாளராகவும் செயற்படவுள்ளனர்.

## இலங்கை அணியில் மீண்டும் போதாஸ்

பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை கிரிக்கெட் அணியின் களத்தடுப்பு பயிற்றுவிப்பாளரான நிக் போதாஸ், தென்னாபிரிக்காவுடனான எஞ்சிய ஒருநாள் போட்டிகளுக்காக இலங்கை அணியுடன் இணைத்துக்கொள்ளப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கை 19 வயதிற்குட்பட்ட அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராக தென்னாபிரிக்கா சென்றிருந்த போதாஸ்,தென்னாபிரிக்க மற்றும் சிம்பாப்வே 19 வயதிற்குட்பட்ட அணிகளுடன் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் தொடரில் சிறப்பாக செயற்பட்டிருந்த அதேநேரம், முத்தரப்பு



தொடரை இளம் இலங்கை அணி வெல்வதற்கு முக்கிய காரணமாகவும் இருந்தார்.

இந்நிலையில், தென்னாபிரிக்க அணியுடனான போட்டித் தொடரில் இலங்கை அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராக மனோஜ் அபேவிக்ரம நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும், இன்று நடைபெறவுள்ள 2ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராக மனோஜுடன், நிக் போதாஸ் இணைந்து செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் அணியின் களத்தடுப்பு பயிற்றுவிப்பாளராக கடந்த வருடம் ஜுலை மாதம் நியமிக்கப்பட்ட முன்னாள் தென்னாபிரிக்க விக்கெட் காப்பாளரும்,இங்கிலாந்தின் லெய்செஷ்டர்ஷர் கிரிக்கெட் கழத்தின் பணிப்பாளருமான 43 வயதான நிக் போதாஸ்.

கடந்த 2000ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமானதுடன், 3 போட்டிகளில் மாத்திரம் விளையாடி அத்தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.

அதனைத்தொடர்ந்து இங்கிலாந்தின் ஹேம்ஷெயார் அணிக்காக முதற்தரப் போட்டிகளில் விளையாடிய நிக், கடந்த 2011ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார்.

## இலங்கை – தென்னாபிரிக்க அணிகள் மோதும் 2ஆவது ஒருநாள் போட்டி

### மாற்றங்களுடன் களமிறங்கிறது இலங்கை



பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை அணியுடனான முதலாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி மிக இலகுவாக வெற்றியைப் பதிவு செய்ததால், இன்று டேர்பன் கிங்ஸ் மீட் மைதானத்தில் நடைபெறவுள்ள 2ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சிலும் அதிக கவனம் செலுத்தி மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளதாக கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போர்ட் எலிசபேத்தில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியினைத் தொடர்ந்து ஒரு நாள் ஓய்வினைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் முதல் பயிற்சிகளை மேற்கொண்ட இலங்கை அணியில், புதுமுக வீரர்கள் அதிக நேரம் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இத்தொடரில் முதலாவது வெற்றியைப் பெற்றுக்கொள்வதற்காக துடுப்பாட்டத்தில் முக்கிய மாற்றங்களை இலங்கை மேற்கொள்ளவுள்ளது. இதன்படி ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக நிரோஷன் திக்வெல்ல மற்றும் சந்துன் வீரக்கொடி களமிறங்குவார்களா அல்லது உபுல் தரங்க மற்றும் தனஞ்சய டி சில்வா களமிறங்குவார்களா என்பது ஆடுகளத்தை பரிசீலித்து தீர்மானிக்கப்படவுள்ளது.

எனினும் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு மிகவும் சாதகமான ஆடுகளத்தை இம்மைதானத்தில் இலங்கை அணியில் லஹிரு குமாரவுக்கு வாய்ப்பு வழங்கப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.அத்துடன், மற்றுமொரு சகலதுறை வீரரும் இன்றைய போட்டியில் இடம்பெறுவதற்கான வாய்ப்பும் காணப்படுகின்றது.இதன்படி ஜெப்ரி வெண்டர்சே அல்லது சந்துன் வீரக்கொடியை நீக்கிவிட்டு சச்சித் பத்திரன, சதுரங்க டி சில்வா அல்லது லஹிரு மதுஷங்க ஆகிய வீரர்களில் ஒருவர் இன்றைய போட்டியில் பெரும்பாலும் விளையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் முதலாவது ஒருநாள் போட்டியில் இளம் வீரர் குசல் மெண்டிஸ் சிறப்பாக விளையாடியிருந்தபோதும், அனுபவம் மிக்க வீரரான தினேஷ் சந்திமால் தொடர்ந்து தடுமாறி வருகின்றமை இலங்கை அணிக்கு மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.ஆனால், கடந்த 2011ஆம் ஆண்டு இதே மைதானத்தில் டில்ஷான் தலைமையிலான இலங்கை அணி, தென்னாபிரிக்க அணியுடன் விளையாடி முதலாவது டெஸ்ட் வெற்றியைப் பதிவு செய்ததுடன், இதில் சங்கக்கார மற்றும் திலான சமரவீர சதங்களைப் பெற்றுக்கொள்ள, இளம் வீரராகக் களமிறங்கிய சந்திமால் அரைச்சதமொன்றையும் பெற்றுக்கொண்டார்.மேலும் ரங்கன ஹேரத் 9 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியும் இருந்தார்.

## சையத் முஸ்தாக் அலி தொடர் டோனி, முரளி விஜய் இணைவு

இந்தியாவில் தற்போது நடைபெற்றுவரும் உள்ளூர் டி20 கிரிக்கெட் தொடரான சையத் முஸ்தாக் அலி கிரிக்கெட் தொடரில், ஜார்க்கண்ட் அணிக்காக இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் மகேந்திர சிங் டோனி களம் இறங்க வாய்ப்புள்ளதாக அந்த அணியின் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஜார்க்கண்ட் அணியின் நிர்வாகம் கூறுகையில் இங்கிலாந்துக்கு எதிரான இன்று நடைபெறவுள்ள 3ஆவது டி20 போட்டித் தொடரின் பின்னர் டோனி ரஞ்சி திரும்பியதும் ஜார்க்கண்ட் அணியுடன் இணைய வாய்ப்புள்ளது என்று தெரிவித்துள்ளது. அத்துடன், காயத்தால் அவதிப்பட்டுவந்த இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் முரளி விஜய், தனது உடற்தகுதியை நிரூபிக்க சையத் அலி டி20 தொடரில் களமிறங்கவுள்ளார். நடைபெற்று முடிந்த இங்கிலாந்து அணிக்கெதிரான இறுதி டெஸ்ட் போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த முரளி விஜய்க்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதனால் அதற்கு பிறகு வந்த எந்த போட்டியிலும் பங்கேற்கவில்லை. தற்போது காயத்தில் இருந்து முரளி விஜய் மீண்டு விட்டார்.



## சாதனையில் ஸ்டோனிஸ்!



ஒக்லாந்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், அவுஸ்திரேலியா அணி தோல்வியை தழுவினாலும் இறுதிவரை போராடிய அணியின் சகலதுறைவீரரான மார்கஸ் ஸ்டோனிஸ், உலக அளவில் ஒருநாள் போட்டியில் 7ஆவது வீரராக களம் இறங்கி, அதிக ஓட்டங்கள் குவித்த 2ஆவது வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். இதற்கு முன்னதாக கடந்த 2015ஆம் ஆண்டு நியூசிலாந்து அணியின் லூக் ரோஞ்ச் ஆட்டமிழக்காமல் இலங்கைக்கு எதிராக 170 எடுத்ததே சாதனையாக உள்ளது.

## ஒரே தொடரில் 3 இலங்கையர்கள்

நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட செப்பல்-ஹெட்லி ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் ஒக்லாந்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஆடுகள நடுவராக இலங்கை சார்பாக முதற்தர கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி தற்போது சர்வதேச கிரிக்கெட்



பேரவையின் நடுவரான ருசிர பல்லியகுருகே கடமையாற்றியதுடன், இலங்கையின் மற்றுமொரு நடசத்திர வீரரும், ஐ.சி.சியின் சிறந்த நடுவருக்கான விருதையும் பெற்றுக்கொண்ட குமார் தர்மசேன மூன்றாவது நடுவராகவும் கடமையாற்றினார்.

இந்நிலையில், போட்டி நடுவராக இலங்கை அணியின் மற்றுமொரு வீரரான ரன்ஜன் மடுகல்லே செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சொந்த கட்சியிலேயே சூனியம்

# டிரம்பின் நடவடிக்கையால் 3ஆம் உலகப்போர் மூளும் அபாயம்

### அமெரிக்க தலைவர்கள் எச்சரிக்கை

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் டிரம்பின் நடவடிக்கையால் மூன்றாம் உலகப்போர் மூளும் அபாயம் உள்ளதாக அமெரிக்க தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பதவி ஏற்று 10 நாட்கள் கூட ஆகவில்லை. அதற்குள் அவர் வெளியிடும் அதிரடி அறிவிப்புகள் உலக நாடுகள் அனைத்தையும் கதிகலங்க செய்துள்ளன.

7 முஸ்லிம் நாடுகளை சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. மற்ற நாடுகளை சேர்ந்தவர்களும் அமெரிக்காவுக்கு வருவதற்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. எனவே, இன்று வெளிநாட்டினர் ஆத்திரம் அவசரத்துக்கு கூட அமெரிக்காவுக்கு செல்ல முடியாத இறுக்கமான நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

உலகளவில் தொழில் செய்து வரும் பன்னாட்டு நிறுவனங்களும் கடுமையான பாதிப்பை சந்திக்கும் நிலையை டிரம்ப் உருவாக்கியுள்ளார். இதனால் அமெரிக்காவிலுள்ள இந்நிறுவனங்கள் கலக்கம் அடைந்துள்ளன. டிரம்ப் அறிவிப்புக்கு கடும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளன.

டிரம்ப் உத்தரவு பிறப்பித்த உடனேயே அது அமுலுக்கு வந்துவிட்டதால் ஆங்காங்கே விமான நிலையங்களில் வெளிநாட்டினரை தடுத்து வைத்துள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைத்திருப்பதற்கு நியூயோர்க், வெர்ஜினியா நீதிமன்றங்களில் உடனடியாக



வழக்கு தொடரப்பட்டு அதற்கு நீதிபதிகள் தடை உத்தரவுகளையும் பிறப்பித்து இருக்கிறார்கள். அமெரிக்காவின் 16 மாகாண அட்டர்னி ஜெனரல்கள் (அரசு வழக்கறிஞர்கள்) டிரம்பின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறார்கள்.

வொஷிங்டனிலும், நியூயோர்க்கிலும் பெரும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. ஜனாதிபதி மாளிகை முன்பும், நியூயோர்க்கிலுள்ள டிரம்ப் வீட்டின் அலுவலகம் முன்பும் பல்லாயிரக்கணக்கானோர் கூடி ஆர்ப்பாட்டம் செய்து வருகிறார்கள். இது மட்டுமல்ல, நாடு முழுவதும் எங்கு பார்த்தாலும் அவருக்கு எதிராக போராட்டம் வெடித்துள்ளது.

எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியினர் டிரம்ப்பின் நடவடிக்கையை கடுமையாக விமர்சித்துள்ளனர். எதிர்க்கட்சி மட்டுமல்ல, சொந்த கட்சியான குடியரசு கட்சி தலைவர்களே டிரம்புக்கு எதிராக திரும்பி இருக்கிறார்கள்.

2008 தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டவரும், தற்போதைய செனட் உறுப்பினருமான ஜோன்மெக்கேன், குடியரசு கட்சியின் மற்றொரு உறுப்பினர் மெக்னால் ரன்டகி ஆகியோர் கூட்டாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில், 'டிரம்ப் யாருடனும் உரிய ஆலோசனை கேட்காமல் தன்னிச்சையாக முடிவுகளை அறிவித்துள்ளார். அமெரிக்க அரசு, பாதுகாப்பு அமைப்பு, நீதிபதிகள், சர்வதேச பொறுப்பு அமைப்புகள், உள்துறை அமைப்புகள் என யாரிடமும் அவர் கலந்து ஆலோசிக்கவில்லை.

இவருடைய முடிவால் நாட்டுக்கே ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. உலக நாடுகள் அமெரிக்காவுக்கு எதிரான நடவடிக்கையை எடுக்கும் நிலையை அவர் உருவாக்கி இருக்கிறார். இது ஒருவேளை 3ஆம் உலகப் போர் மூளும் நிலையை உருவாக்கி விடுமோ? என அஞ்சுகிறோம்'' என தெரிவித்துள்ளார்.

இதே போன்ற கருத்தை குடியரசு கட்சி செனட் உறுப்பினர் கிறிஸ்மர்பியும் கூறி இருக்கிறார். அவர் கூறும் போது, குடியரசு கட்சி செனட் உறுப்பினர்களில் கணிசமானவர்கள் டிரம்ப் நடவடிக்கையை ஏற்கவில்லை என்று தெரிவித்து இருக்கிறார். எனவே, சொந்த கட்சியிலேயே டிரம்ப் கடும் எதிர்ப்பை சந்திக்கும் நிலை ஏற்பட்டு இருக்கிறது. இது வரை அமெரிக்காவுக்கு பக்க பலமாக இருந்த நாடுகள் கூட டிரம்ப்பின் நடவடிக்கையை எதிர்க்க ஆரம்பித்து விட்டன. பக்கத்து நாடான கனடா, மெக்சிகோ ஆகியவை டிரம்பின் நடவடிக்கையை கண்டித்துள்ளன.

## சிலியில் காட்டுத் தீ: 10 இலட்சம் ஏக்கர் காடு நாசம்; 11 பேர் பலி

சிலியில் ஏற்பட்டு பயங்கர காட்டுதீயால் சுமார் சுமார் 10 லட்சம் ஏக்கர் வனப்பகுதிகள் தீயில் கருகியதுடன், இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பலாகியுள்ளன.

தீ விபத்து சில விஷமிகளால் ஏற்படுத்தப்பட்டது என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பலர் கைதாகியுள்ளனர்.

# உலகச் செய்திகள்

## ஆபத்தான நிலையில் அமெரிக்காவின் நற்பெயர்

### ஒபாமாவின் செய்தித்தொடர்பாளர்




''டிரம்ப் பதவி ஏற்றதும் செய்த இந்த முதல் செயலால், அமெரிக்காவின் நற்பெயர் ஆபத்தான நிலையிலுள்ளது'' - இவ்வாறு டிரம்பின் 7 இஸ்லாமிய நாடுகளின் தடை உத்தரவு குறித்து, ஒபாமாவின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

''ஏழு நாட்டு இஸ்லாமியர்களை அமெரிக்காவுக்குள் வரவிடாமல் தடுத்த ட்ரம்ப்பின் தீர்மானத்துக்கு, ஒபாமா கடும் கண்டனம் மற்றும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

டிரம்பின் செயற்பாடு அமெரிக்க மத ஒருமைப்பாடுக்கு களங்கம் விளைவிப்பதாக உள்ளது. அமெரிக்காவில் நடந்த தீவிரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்ட நபர்களில் பெரும்பான்மையானோர் அமெரிக்காவைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள்தான். அவர்கள் பல தலைமுறைகளாக அமெரிக்க மண்ணில் வாழ்ந்து வருபவர்கள். குறிப்பிட்ட இந்த 7 நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமியர்களை அமெரிக்காவுக்குள் வரவிடாமல் தடுப்பது முறையாகாது'' என்று தெரிவித்துள்ளார்.

ஒபாமா மற்றும் அவரது மனைவி மிச்சேல் ஒபாமா ஆகியோர் டிரம்ப்பின் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டனர். ஜனவரி 20ஆம் திகதி அதிகாரபூர்வமாக ஜனாதிபதி பதவியிலிருந்து ஒபாமா விலகியபோது, ''டிரம்ப் அமெரிக்க ஒருமைப்பாடுக்கு களங்கம் விளைவித்தால், அதற்கு எதிப்பு தெரிவிக்க நான் தயங்கமாட்டேன்'' எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 01ST FEBRUARY 2017